அதிசீக் கிரமாய் அருள்வாய் போற்றி
*அதிட்டா னப்பொரு ளானாய் போற்றி
அதிதீவிர தரன் ஆக்குவை போற்றி 50

அதி தேவதையாய் அமர்வாய் போற்றி
அதிநுட்பம் விளக் கறிவேபோற்றி
அதிபதியாய் உள் அமர்ந்தாய் போற்றி

*அதிட்டானம்—காரணம்

அதிரசமாய் இனிப் பானுய் போற்றி
அதிருட்டப் பொரு ளானுய் போற்றி
அதிருப்தி தவிர்த்தருள் அற்புத போற்றி
அதிவர் ணுச்ரமி யானுய் போற்றி
அதீத நிலையை அடைந்தோய் போற்றி
அத்யந்தம் பிரிவறியாய் போற்றி
அத்யயனம் செயா தறிந்தோய் போற்றி

அநந்த கலைகளின் அந்தமே போற்றி
அநந்த சொரூபமும் ஆனுய் போற்றி
அநந்திய மாய்ஒளிர் அன்பே போற்றி
அநவர தமும்எனை ஆள்வாய் போற்றி
*அநாமய வடிவோ டமைவாய் போற்றி
அநாயாச மாய்ச்செயல் ஆற்றுவை போற்றி
அநித்திய நித்தியம் உணர்த்துவை போற்றி
அநுகூலம் புரி ஆண்டகை போற்றி
அநுக்கிரகம் செயும் அண்ணுல் போற்றி
அநுட்டானம் தரும் ஆரிய போற்றி

அநுபவம் மிகுமா றருள்வோய் போற்றி
அநுபூதிச் சுடர் ஆவாய் போற்றி
அநேகமும் ஏகமும் ஆனுய் போற்றி
அந்தமும் ஆதியும் ஆனுய் போற்றி
அந்தரங்கத் துணை ஆவாய் போற்றி
அந்தர துந்துபி ஒலியோய் போற்றி
அந்தராத் மாவாய் அமைவாய் போற்றி
†அந்தரிக்ஷத் தொளி ஆனுய் போற்றி
அந்தரி யாமியாம் ஆரிய போற்றி
அந்தர் முகநோக் கருள்வோய் போற்றி

அந்தி சந்தியெலாம் ஆனவ போற்றி
அபயம் அளித்தருள் அன்பா போற்றி
அபர பரம்காட் டாரிய போற்றி
அபரோட்ச ஞானம் அருள்வோய் போற்றி
அபவாதம் தவிர் அபயா போற்றி
அபிடேகம் கொளும் அநகா போற்றி

*அநாமயம்—நோயின்மை †அந்தரிக்ஷம்—ஆகாயம்

அபேதநிலைதந் தருள்வோய் போற்றி
அப்புமண் வளிவெளி அனலேபோற்றி
*அப்ரமேயச் சுகம் ஆவாய் போற்றி
அமிருத வகைபல அருளுவை போற்றி 90

அமைதி அளித்தருள் அமலா போற்றி
அரண்செய் தடியரை ஆள்வாய் போற்றி
அரவிந்த லோசன ஆனன போற்றி
அருட்கொடி சுவாமிக் கருளினை போற்றி
அருட்சக்தி அன்னையுள் அமர்ந்தனை போற்றி
அருட்செல்வம் தரும் ஆரிய போற்றி
அருட்பாடல் பல அருளினை போற்றி
அருள்நகர் அமர்ந்தர சாள்வோய் போற்றி
அலமரல் நீக்கிடும் நிலைமைய போற்றி
அவதரித் தெமையாள் அண்ணல் போற்றி 100

அவதானம் பல ஆற்றுவை போற்றி
அவம் நீக்கித் தவம் ஆக்குவை போற்றி
அழல்நிகர் மெய்யறி வருள்வோய் போற்றி
அழியாப் பெருநிலை அருள்வோய் போற்றி
அழுக்கா ருதி அகற்றுவை போற்றி
அழுதடி தொழுவோர்க் கமுதே போற்றி
அழுந்த நினைக்கின்முன் வருவோய் போற்றி
அளப்பரி தாம்பே ரன்பே போற்றி
அறநெறி பிறழார்க் கரணே போற்றி
அறமுதல் நான்கும் அளிப்பாய் போற்றி 110

அறிதுயில் கொளும்நிலை அருள்வாய் போற்றி
அறுகணி இறையருள் ஆர்வாய் போற்றி
அறுசுவை உணவருள் அப்பா போற்றி
அறுவடை செயும்வகை அருள்வாய் போற்றி
அறைபல மறைமுடி வருள்வாய் போற்றி
அற்புதச் சிற்சுக வடிவே போற்றி
அற்புதம் பற்பல ஆற்றுவோய் போற்றி
அற்றமில் சுற்றமாய் அமைவாய் போற்றி
அனுடத் தமைதிகொள் அமலா போற்றி
அன்பின் வித்தென அமைவாய் போற்றி 120

*அப்ரமேயம்—அளக்கப்படாதது.

அன்னையும் அத்தனும் ஆனாய் போற்றி

ஆகம ப்ரமாணம் அறிவோய் போற்றி
ஆகாமியம் தவிர் அழலே போற்றி
ஆகு வாகனர்க்குநீ ராட்டுவை போற்றி
ஆக்கம் அனைத்தும் அளிப்பாய் போற்றி
ஆசா பாசம் அறுப்பவ போற்றி
ஆசாரத் துறை அருள்வாய் போற்றி
ஆசாரியன் என அமைவாய் போற்றி
ஆசி வழங்கி அருள்வாய் போற்றி
ஆசு தவிர்த்தன் பருள்வாய் போற்றி 130

ஆச்சரியம் பல புரிவோய் போற்றி
ஆஸ்தா னத்துக்கரசே போற்றி
ஆஸ்தி யெலாம்எனக் கானாய் போற்றி
*ஆஸ்பதமாய் எமக் கமைந்தாய் போற்றி
ஆக்ஞா சக்கரம் உடையாய் போற்றி
ஆடம்பரம் அணு வறியாய் போற்றி
ஆட்கொண் டருளால் ஆள்வாய் போற்றி
ஆட்டுவித் தருளறி வளிப்பாய் போற்றி
ஆணவ மலங்கொய் தருள்வோய் போற்றி
ஆணையால் அனைத்துல காள்வாய் போற்றி 140

ஆணைவழி நிற்க அருள்வாய் போற்றி
ஆண்மை மிகுந்தொளிர் அதிபா போற்றி
ஆதர்ச புருஷனாய் அமைந்தாய் போற்றி
ஆதவனாய் இருள் அறுப்பாய் போற்றி
ஆதார ஆதேயம் ஆனாய் போற்றி
ஆதி காரணமாய் அமைந்தாய் போற்றி
ஆதிக்கம் மிக்கபே ரரசே போற்றி
ஆதிலக்குமி யுளத் தமர்ந்தாய் போற்றி
ஆதீனம் நின்னதாக் கிடுவாய் போற்றி
ஆத்மார்த்த குருவாய் அமைந்தாய் போற்றி 150

ஆத்மீக நன்னெறி அருள்வோய் போற்றி
ஆநந்த பரவசத் தமிழ்வோய் போற்றி
ஆநந்த பாஷ்பம்எற் கருள்வாய் போற்றி

*ஆஸ்பதம்—புகலிடம்

ஆநந்த பைரவி பாடுவோய் போற்றி
ஆநந் தப்பே ராழியே போற்றி
ஆநெய்போல் என்னுளத் தமைவாய் போற்றி
ஆப்தனுய் நல்வழிக் கழைப்பாய் போற்றி
ஆயத்தமாய்ப் பய னுவாய் போற்றி
ஆயாசம் தவிர்த் தருள்வாய் போற்றி
ஆயிர இதழ்த் தாமரையாய் போற்றி 160

ஆயிர மாயிரம் கண்ணுேய் போற்றி
ஆயிர மாயிரம் கரத்தோய் போற்றி
ஆயிர மாயிரம் செவியோய் போற்றி
ஆயிர மாயிரம் பதத்தோய் போற்றி
ஆயிர மாயிரம் புகழோய் போற்றி
ஆயிர மாயிரம் பெயரோய் போற்றி
ஆயிர மாயிரம் மறையோய் போற்றி
ஆயிர மாயிரம் முகத்தோய் போற்றி
ஆயிர மாயிரம் முடியோய் போற்றி
ஆயிர மாயிரம் வாயோய் போற்றி 170

ஆயிரம் கதிரொளி யுடையோய் போற்றி
ஆயிரம் மதிநில வணையோய் போற்றி
ஆயுதமாய் அருள் உடையோய் போற்றி
ஆரண ரகசியம் அறிந்தோய் போற்றி
ஆரமுதாய் உள் அமைவாய் போற்றி
ஆரவா ரமிலா அருளே போற்றி
ஆராதனைஅன் பென்போய் போற்றி
ஆரியர்க் காரியன் ஆனுய் போற்றி
ஆரோகண நெறி அறிந்தாய் போற்றி
ஆரோகணித் துளத் தமர்ந்தாய் போற்றி 180

ஆரோக்கிய மயம் ஆவாய் போற்றி
*ஆரோபிதம் அணு அறியாய் போற்றி
ஆர்கலி சூழ்புவி அரசே போற்றி
ஆர்க்கும் அளப்பரும் அற்புத போற்றி
†ஆர்ச்சிதம் அருள்என அறைவோய் போற்றி
ஆர்த்தர்க் கருள்புரி அறவோய் போற்றி

*ஆரோபிதம்—கற்பிதம். †ஆர்ச்சிதம்—சம்பாத்யம்.

ஆர்வலர் அன்புக் கெளியாய் போற்றி
ஆலயம் பலஉண் டாக்கினை போற்றி
ஆலவாய் ஐங்கரற் கன்பா போற்றி
ஆலிங் கனம்புரிந் தருள்வாய் போற்றி

ஆலோ சனைக்கெட் டரியாய் போற்றி
ஆலோசி யாதருள் அளிப்போய் போற்றி
ஆவுடை யன்னை நல் கருட்சுத போற்றி
ஆழ்ந்தகன் றொளிர் நுண் ணறிவே போற்றி
ஆளரி யேறென நிமிர்ந்தோய் போற்றி
ஆறா தாரம் கடந்தோய் போற்றி
ஆறுதல் ஆருயிர்க் கருள்வோய் போற்றி
ஆறுமுகன் பெயர் உடையோய் போற்றி
ஆறெழுத் தோரெழுத் தானோய் போற்றி
ஆற்றல் மிகஉடை அதிபா போற்றி

ஆற்றொழுக் காய்க்கவி அருள்வோய் போற்றி
ஆன்ம தரிசனம் அருள்வோய் போற்றி
ஆன்ற புகழுடை அசலா போற்றி

இஃதருள் நெறியென் றீர்ப்போய் போற்றி
இகபர சாதனம் ஈவோய் போற்றி
இகல்வினைப் பகையை எரிப்பாய் போற்றி
இகழ்வார்ப் பொறுத்தருள் இயல்பே போற்றி
இங்கிதமாய் அருட் கீர்ப்போய் போற்றி
இசைநுணுக் கத்துள் இணைந்தோய் போற்றி
இசைப்பறிந் தியக்கும் இங்கித போற்றி

இசைப் பாடல்பல இயற்றினை போற்றி
இசை மடந்தையை வெல் இசையோய் போற்றி
இசை யாரையும் இசைத்திடுவோய் போற்றி
இச்சகம் பேசா இயல்போய் போற்றி
இச்சை செயல்அறி விணைப்பே போற்றி
இடகலை பிங்கலை இடையோய் போற்றி
இடக்குசெய் புலனைந் தடக்குவை போற்றி
இடம்பொருள் ஏவலை ஈவோய் போற்றி
இடரெலாம் நீக்கியாள் எம்மான் போற்றி
இடித்துரைத்துத் திருத்திடுவோய் போற்றி

இடுக்கண் அகற்றிடும் இறையே போற்றி
இட்ட காமியங்களும் ஈவோய் போற்றி
இட்ட தேவதையாய் இருப்போய் போற்றி
இணையிலாக் குருவாய் இருப்போய் போற்றி
இதமாய் இணங்கப் புரிவாய் போற்றி
இதய ரதச் சாரதியே போற்றி
இமைப் பொழுதும் பிரிவில்லாய் போற்றி
இமையவர் முனிவோர்க் கிறைவா போற்றி
இம்மியும் தீமை யிலாதாய் போற்றி
இம்மெனு முன் எழுந்தருள்வாய் போற்றி 230

இம்மையும் மறுமையும் ஆனுய் போற்றி
இயக்கம் அறிந்தியக் கிடுவாய் போற்றி
இயங்குவித் தருளொ டிணைப்பாய் போற்றி
இயமானனுய்ப் பயன் ஈவாய் போற்றி
இயம்பற் கரியஇன் னியல்பே போற்றி
இயலிசை நாடகத் தியல்பே போற்றி
இயலெலாம் ஆகிஉள் இயைவாய் போற்றி
இயற்கையில் விளங்கிடும் எழிலே போற்றி
இயற்றரும் தவப்பே ரெழிலே போற்றி
இயேசுசொல் உண்மை இயம்பினே போற்றி 240

இரங்கியாண் டருள்புரி எந்தாய் போற்றி
இராமலிங் கத்தினுள் இலங்கினே போற்றி
இருக்கையில் அடியரை ஈர்ப்போய் போற்றி
இருடியர் பட்டியில் உதித்தோய் போற்றி
இரும்பைக் கரும்பாய் ஆக்குவை போற்றி
இருவினை வலிதவிர் இயல்பே போற்றி
இரேவதி நாள் அவதாரா போற்றி
இலக்கணம் எல்லாம் உடையாய் போற்றி
இலக்கிது என்ன இயம்புவை போற்றி
இலக்கியமாகி இருப்பாய் போற்றி 250

இலக்குமிகரம் மணக் கீவாய் போற்றி
இலங்கரு ளறிவொளி யீவாய் போற்றி
இல்லைப் புனிதமாக் கிடுவாய் போற்றி
இழிவற உயர்நெறி யீவாய் போற்றி
இழுக்கமில் ஒழுக்கமீந் திடுவோய் போற்றி

இளகுநன் மனத்தில் இருப்போய் போற்றி
இளங்கதிர் நிகர்விழி யெழிலோய் போற்றி
இளமையில் நிட்டையேற் றிருந்தோய் போற்றி
இளம்பதப் பாகென இனிப்போய் போற்றி
இளையா உள்ளத் தீசா போற்றி

இறப்பு பிறப்பை இகந்தோய் போற்றி
இனிக்கும் பலபொரு ளானாய் போற்றி
இனிப்பாதிய ஆ றியல்பே போற்றி
இன்பமே வடிவாய் இருப்பாய் போற்றி
இன்னருள் தாகம் எழுப்புவோய் போற்றி
இன்னா செயல்தவிர் இறையே போற்றி

ஈகையின் வடிவுடை எம்மான் போற்றி
ஈசுரன் ஒத்துள் இருப்போய் போற்றி
ஈடணை மூன்றை எரிப்பாய் போற்றி
ஈடேறச் செயும் எந்தாய் போற்றி

ஈனமில் மெய்ந்நெறி யீவாய் போற்றி
உகரமும் மகரமும் ஆனாய் போற்றி
உகந் தடியனையா ளுடையாய் போற்றி
உகுத்துவல் வினைத்தொகை ஒழிப்பாய் போற்றி
உகைக்கநல் உளப்பரி யுடையாய் போற்றி
உடம்புக் குயிரென ஒளிர்வாய் போற்றி
உடல்பொரு ளாவிகொள் ஒருவா போற்றி
உடைமையாய்ப் பேரருள் உடையாய் போற்றி
உடையவன் கணக்கென் றுரைப்போய் போற்றி
உடையா துளத்தினை ஊக்குவோய் போற்றி

உட்கர ணங்கட் கொளியே போற்றி
உட்கார வைத்தருள் ஊட்டுவோய் போற்றி
உஷ்ண சீதச்சமம் உடையாய் போற்றி
உட்பொருள் உணர்த்தும் உத்தமா போற்றி
உணக்கி ஆணவத்தினை உலைப்போய் போற்றி
உணர்ச்சி வசப்படா உயர்வே போற்றி
உணர்ந்தோர்க் கருளமு தூட்டுவை போற்றி
உணர்வுக் குணர்வாம் உணர்வே போற்றி
உணவுடை பணமாம் உருவோய் போற்றி
உண்டாக் கிக்காத் தொழிப்பாய் போற்றி

உண்டி சுருக்கிஅன் பூட்டுவை போற்றி
உண்ணவும் எண்ணவும் உய்ப்பாய் போற்றி
உண்மையின் உயர்வை உரைத்தாய் போற்றி
உதய சூரியனாய் ஒளிர்வாய் போற்றி
உதவி யெலாம்புரி உறவே போற்றி
உதாசினம் அறியா உத்தம போற்றி
உதாரண மாய்வாழ்ந் துயர்ந்தோய் போற்றி
உதாரத்துவம் மிகும் ஒருவா போற்றி
உத்தமச் செயல்களில் உய்ப்பாய் போற்றி
உத்தமர்களை ஆட் கொள்வாய் போற்றி 300

உத்தமர் குழுநடு உள்ளோய் போற்றி
உத்தமோத் தமகுணம் உடையாய் போற்றி
உந்தி எங்களை அருட் கூக்குவை போற்றி
உபதேசம் புரி ஒருவா போற்றி
உபநிட சாரம் உணர்ந்தோய் போற்றி
உபமா னத்தால் உணர்த்துவை போற்றி
உபவா சத்தினில் உய்ப்போய் போற்றி
உபாதி அனைத்தும் ஒழிப்போய் போற்றி
உமைமகன் அருள்பெற் றொளிர்வோய் போற்றி
உம்பர்க் குவகையை ஊட்டுவை போற்றி 310

உயர்நிலை உறுமா றுய்ப்பாய் போற்றி
உயர்ந்தோர் அடியர்என் றுரைப்போய் போற்றி
உயிர்க்குயி ராகி உறைவாய் போற்றி
உயிர்தரும் மருந்தாய் ஒளிர்வாய் போற்றி
உயிர்த்துணையாய் உள் ளூறுவாய் போற்றி
உரமிகு மெய்த்தவம் உடையாய் போற்றி
உரிமையொ டெமையா ளுடையாய் போற்றி
உரியோர்க் குரியன உரைப்போய் போற்றி
உருகடி யவருக் குரியாய் போற்றி
உருவகப் படுத்தி உரைப்பாய் போற்றி 320

உருவம் கொண்டணு கொருவா போற்றி
உருவாய் அருவாய் உள்ளாய் போற்றி
உருள்பல பிறப்பும் ஒழிப்பாய் போற்றி
உரைஉணர் வறியா ஒளியே போற்றி
உரோமாஞ் சிதம்தந் துவப்போய் போற்றி

உலகியல் அருளியல் உணர்த்தினை போற்றி
உலவாக் கிழியென ஒளிர்வாய் போற்றி
உலையிடு மெழுகாய் உருகினை போற்றி
உல்லா சத்தோ டுலவுவை போற்றி
உவட்டா அருள்மொழி உரைப்போய் போற்றி

உவமிக் கொணுஅருள் உருவே போற்றி
உழலல் தவிர்த்தருட் குய்ப்போய் போற்றி
உழைப்பறிந் தூதியம் ஈவோய் போற்றி
உளம் கவர் கள்வனுய் உற்றனை போற்றி
உள்குமுன் அறிந்தே உதவுவை போற்றி
உள்ளக் கருத்துக் கொத்தவ போற்றி
உள்ளங் கைப்பொருள் ஆவாய் போற்றி
உள்ளடங்குதல் உயர் வென்போய் போற்றி
உள்ளதை உள்ளவா றுணர்த்துவை போற்றி
உள்ளத் துழுதருள் ஊன்றுவை போற்றி

உள்ளொளி பெருக்கும் ஒருவா போற்றி
உறக்கமில் மெய்த்தவ ஊற்றம் போற்றி
உறங்கா துறங்கிச் சுகிப்போய் போற்றி
உறவினர் அடியரென் றுரைப்போய் போற்றி
உறவுட் சிறந்தபே றுறவே போற்றி
உறுதிப் பொருள் ஓதிடுவாய் போற்றி
உறுதுணையாய் உள் ளுறைவோய் போற்றி
உறுப்புதோ றருளமு தூற்றுவை போற்றி
உறையைந் தையும்கடந் தொளிர்வோய் போற்றி
உற்சவம் கொண்டருள் ஊட்டுவை போற்றி

உற்சா கம்தந் தூக்குவை போற்றி
உற்பனர் விற்பனர் உறவே போற்றி
உற்பா தங்கள் ஒழிப்போய் போற்றி
உன்னற் கரும்எழிற் சொன்னமே போற்றி

ஊகத் தடங்கா யோகமே போற்றி
ஊக்க முளார்க்கோர் ஆக்கமே போற்றி
ஊசலா டிடும்உளத் தொளிராய் போற்றி
ஊடிடா தவரைக் கூடுவோய் போற்றி
ஊட்டிப் புரந்தருள் உறவே போற்றி
ஊதிய மாய்எனக் குற்றுய் போற்றி

ஊத்தை யேனையும் ஆளுடையாய் போற்றி
ஊமையைப் பேசவைத் திடுவாய் போற்றி
ஊருணி நீர்நிறைந் தனையாய் போற்றி
ஊர்த்துவ நோக்கருள் ஒளியே போற்றி
ஊழிதோ றேங்குபே ரொளியே போற்றி
ஊழித் தீயொத் தொளிர்வோய் போற்றி
ஊழியம் கொண்டுயர் வளிப்போய் போற்றி
ஊழை வெலும்தவ உரனே போற்றி
ஊனக் கண்கா ணரியாய் போற்றி
ஊனுடற் கோயிலுள் உறைவாய் போற்றி 370

எங்கணும் மேவி இலங்குவை போற்றி
எச்சரித் தருளர சியற்றுவாய் போற்றி
எஞ்சலி லாத்தவத் தேற்றமே போற்றி
எண்குணக் குன்றென இலங்குவை போற்றி
எண்வகைச் சித்தியும் எய்தினேய் போற்றி
எதார்த்த நிலையில் இருப்போய் போற்றி
எதிர்ப்பறி யாஅருள் இயல்பே போற்றி
எதுகை மோனைசால் இசையோய் போற்றி
எத்தனை இன்பமும் ஈவாய் போற்றி
எப்பொரு ளுக்கும் இறைவா போற்றி 380

எம்பிரா னுகி இலங்குவை போற்றி
எம்மைக் கும்துணை யாவாய் போற்றி
எய்ப்பில் வைப்பாகி இலங்குவை போற்றி
எல்லாம் இயற்றிட வல்லாய் போற்றி
எல்லையில் லாப்பே ரின்பே போற்றி
எவரையும் ஆட்கொளும் இறைவா போற்றி
எழுதரு ஞானமா மணியே போற்றி
எழு பிறப்பைச் சுடும் எரியே போற்றி
எளிதாய்ச் சட்டமொன் றீந்தோய் போற்றி
எளிமைகண் டிரங்கும் இயல்பே போற்றி 390

என்பையும் உருக்குமெய் யன்பே போற்றி

ஏகசிம் மாசனத் தேறினேய் போற்றி
ஏக நாயகனுய் இலங்குவை போற்றி
ஏக போகப்பே ரின்பமே போற்றி
ஏக வழிக்கா ளாக்குவை போற்றி

ஏக்கம் தவிர்பே ரூக்கமே போற்றி
ஏடறியா மறை இயம்புவை போற்றி
ஏதமிலா அருள் நாதமே போற்றி
ஏதிலார் தமர்என எண்ணுய் போற்றி
ஏந்தலாய் என்னுட் சார்ந்தனே போற்றி

ஏன்றெனை ஆண்டருள் ஈசா போற்றி

ஐங்குர வருமாய் ஆனுய் போற்றி
ஐசுவ ரியமெலாம் ஆனுய் போற்றி
ஐம்பத் தோரெழுத் தானுய் போற்றி
ஐம்புலக் கதவை அடைப்போய் போற்றி
ஐம்பூ தத்தியல் பறிவோய் போற்றி
ஐம்பொறிக்கும் விருந்தானுய் போற்றி
ஐயம் திரிபற அருள்வாய் போற்றி
ஐயுற வில்மெய் யறிவே போற்றி

ஒடுங்கிய புலனைந் துடையாய் போற்றி

ஒட்டிய உறவாய் ஒளிர்வாய் போற்றி
ஒப்புர வொழுக உரைப்போய் போற்றி
ஒருமைகொள் மனமிசை உறைவாய் போற்றி
ஒல்லையில் உற்றருள் ஊட்டுவை போற்றி
ஒழுக்க முளோரை இழுப்பாய் போற்றி
ஒளியிற் சிறந்தபே ரொளியே போற்றி
ஒள்ளியர் பால்நின் ருளிர்வோய் போற்றி
ஒற்றுமை தந்தருள் சிற்பர போற்றி
ஒன்றுயர் நெறியென ஓதுவை போற்றி

ஓங்கருட் கொடியை உயர்த்தினை போற்றி

ஓங்கா ரப்பே ரொளியே போற்றி
ஓசையோ டொலிவகை யானுய் போற்றி
ஓதா தனைத்தும் உணர்ந்தாய் போற்றி
ஓய்வறி யாமல் உழைப்போய் போற்றி

ஔடதம் நீறென அமைத்தாய் போற்றி

கங்கணம் பூண்டெனைக் காப்பாய் போற்றி

கங்குல் பகல்கா ணரியாய் போற்றி
கங்கையை விடியலிற் காட்டினை போற்றி
கசடறி யாமனக் களிப்பே போற்றி
கசிவார் உள்ளத் தமுதே போற்றி 430

கஞ்சம் நிகர்சே வடியாய் போற்றி
கடமை உணர்த்தும் காவல போற்றி
கடலிற் பெரிதாம் கருணை போற்றி
கடாக்ஷம் அளித்துக் காப்பாய் போற்றி
கடிமலர் மாலைகொள் கர்த்தா போற்றி
கடினமாம் மனத்தைக் கரைப்பாய் போற்றி
கடுகடுப் பணுவும் காணுய் போற்றி
கடையேன் பிழைகள் கருதாய் போற்றி
கட்டறுத் துண்மை காட்டுவை போற்றி
கட்டுப்படா அருட் களிறே போற்றி 440

கட்டுப் பாட்டுள் வைப்போய் போற்றி
கணக்கறிந் திணக்கம் காட்டுவை போற்றி
கணமும் வீணிற் கழியாய் போற்றி
கணுவறியா நற் கரும்பே போற்றி
கண்டதும் ஈர்த்தருள் காந்தமே போற்றி
கண்ணுய் மணியாம் கவினே போற்றி
கண்ணிமை போலெனைக் காப்பாய் போற்றி
கண்ணேட்ட மிகும் கண்ணே போற்றி
கதியைக் காட்டருள் நிதியே போற்றி
கதுமென வந்தாள் கருணை போற்றி 450

கபடமில் உள்ளக் கனிவே போற்றி
கபாடம் திறக்கக் காட்டுவை போற்றி
கமல பதத்தெழில் காட்டுவை போற்றி
கமழ்மலர் மாலைகொள் கண்டா போற்றி
கரணத் தூய்மை அளிப்போய் போற்றி
கரவறி யார்காண் கவினே போற்றி
கருணுகர உருக் காட்டுவை போற்றி
கருமையுள் வெண்மையைக் காட்டுவோய் போற்றி
கருவியாய் எனைக்கொடு கடவுவோய் போற்றி
கருவுட் புகாநெறி காட்டுவோய் போற்றி 460

கருவூல மாய்நிறை கருணையோய் போற்றி
கரையா இனியகற் கண்டே போற்றி
கரையில்பே ரன்புக் கடலே போற்றி
கர்ணாமிர்த மொழி கழறுவோய் போற்றி
கர்ப்ப க்ரஹத்துட் காட்சியே போற்றி
கர்ப்பூர தீபக் கவினே போற்றி
கர்ம யோகத் திறம் காட்டினை போற்றி
கர்வம் நீருக்குசிற் கனலே போற்றி
கலக்கம் தவிர்த்தருள் கடவுளே போற்றி
கலியினிற் கிரேதம் காட்டினை போற்றி 470

கலியுக வரதனாம் காரணா போற்றி
கலையெலாம் விளக்கருட்கலைஞனே போற்றி
கல்யாண குணாகரனே போற்றி
கல்லைக் கனியாக் கிடவலோய் போற்றி
கல்வியின் உட்பொருள் கண்டோய் போற்றி
கவசம் போலெமைக் காப்பாய் போற்றி
கவலைதீரக் கழல் காட்டுவோய் போற்றி
கவின்மிகு கற்பகக் காவே போற்றி
கழிபே ருவகைக் கடலே போற்றி
களங்கமிலா அருட் கவினே போற்றி 480

களஞ்சியம் நல்கிக் காப்போய் போற்றி
களைகணே ஞானக் கண்ணே போற்றி
கள்ளம் களையும் காவலா போற்றி
கறங்கெனத் திரியெனைக் காப்பாய் போற்றி
கற்பக விருட்சக் கனியே போற்றி
கற்பனை யனைத்தும் கடந்தோய் போற்றி
கற்பின் வடிவக் கனலே போற்றி
கற்றவர் உண்ணும் கனியே போற்றி
கனக சபைநடம் காண்போய் போற்றி
கனலையும் எரிக்கும் கனலே போற்றி 490

கனவினிற் காட்சிகள் காட்டுவோய் போற்றி
கனியினும் இனிய கருணையோய் போற்றி
கனிவுறு ஞானக் கனியே போற்றி
கன்மங் களைச்சுடும் கனலே போற்றி

காக்கத் தோன்றிய காவல போற்றி
காசிஉள் உளதெனக் காட்டுவோய் போற்றி
காஞ்சனத் திச்சை கழற்றுவோய் போற்றி
காணறியா அருட் காட்சியே போற்றி
காதல்செய் அடியர்சார் கதியே போற்றி
காமதேனுவை நிகர் கருணையே போற்றி 500

காமாதியைச் சுடும் கனலே போற்றி
காமியம் அணுவும் கருதாய் போற்றி
காயம் ஆலயமாக் கண்டோய் போற்றி
காரண காரியம் கடந்தோய் போற்றி
காரிய சித்தியைக் கண்டோய் போற்றி
காருண்யப் பெருங் கடலே போற்றி
கால தேசாதி கடந்தோய் போற்றி
காலத்தின் உயர்வைக் காட்டினை போற்றி
காலனை வெல்நெறி காட்டினை போற்றி
காலையில் எழுப்பும் கர்த்தனே போற்றி 510

காவி கொள்ளா உளத் துறவியே போற்றி
காவியத் துட்பொருள் காட்டுவை போற்றி
காவிரி வெள்ளம் நேர் கருணையோய் போற்றி

கிம்புருஷாதி சேவிதனே போற்றி
கிரஹஸ்தரை யாண்டருள் கிருபையோய் போற்றி
கிராமந்தொறும் நடந் தேகினை போற்றி
கிரிநிகர் பேரருட் கீர்த்தியோய் போற்றி
கிரியையின் உட்பொருள் கிளத்தினோய் போற்றி
கிருட்டிண மூர்த்தியைத் தெருட்டினை போற்றி
கிளர்அருள் உணர்ச்சி கிளப்புவோய் போற்றி 520

கீடம் நேர் என்னையாள் கிருபையோய் போற்றி
கீர்த்தனம் ஓதும் உற் கிருட்டனே போற்றி
கீர்த்தி நிறைஅருட் கேளே போற்றி
கீழ்ப்படியக் கற்பிப்பவா போற்றி
கீழ்மை யெலாம்தவிர் கிற்பவா போற்றி

குகையினுள் நோற்றசற் குருவே போற்றி
குச்சுமச் சொன்றெனும் கொள்கையோய் போற்றி
குடிகொள உளத்திடம் கொண்டனை போற்றி

குடிலையின் சிறப்பறி கொற்றவா போற்றி
குடும்பத்தொடும் தொழக் குறித்தனே போற்றி 530

குட்ட மாதிய பிணி குலைப்பவா போற்றி
குட்டிபெண் பூனைநேர் கொள்கையோய் போற்றி
குணபே தங்களைக் குமைத்தனே போற்றி
குணமெனும் குன்றின்மேல் நின்றனே போற்றி
குண்டலி சக்தியைக் கூட்டுவை போற்றி
குதூகலம் நாள்தொறும் கூட்டுவை போற்றி
குத்திரம் சிறிதுமில் குருபரா போற்றி
குபேரச் செல்வமும் கொடுப்பவா போற்றி
குமிழி இவ் வாழ்வெனக் கூறுவை போற்றி
கும்பகம் எளிதினிற் கூட்டுவை போற்றி 540

கும்பாபி டேகம் கொள்பவா போற்றி
கும்மி சிந்தாதிய கூறினே போற்றி
குயில்நிகர் குரலுடைக் குருமணீ போற்றி
குரானின் உட் பொருளெலாம் கூறினே போற்றி
குருக்களிற் சிறந்தசற் குருபரா போற்றி
குருடனும் என்னை ஆட் கொண்டனே போற்றி
குருதியோட்டத் தருள் கூட்டுவை போற்றி
குருநாதனாய் அருள் கொடுப்பவா போற்றி
குருமூர்த்த மாகமுன் குருகுவை போற்றி
குலம்விளக் கிடவரும் குருமணீ போற்றி 550

குவலய மெலாம் தொழும் குருபரா போற்றி
குவியும்நன் மனத்தமர் குழகனே போற்றி
குழந்தைபோற் பேசிடும் குரவனே போற்றி
குழுவென அடியரைக் கூட்டுவை போற்றி
குழையும்நல் உளத்தருள் கூட்டுவை போற்றி
குறிக்கோள் உணர்த்தி ஆட் கொண்டனே போற்றி
குறிப்பும் விளக்கமும் கொடுப்பவா போற்றி
குறையெலாம் நிறைவுசெய் கொற்றவா போற்றி
குற்றம் பொறுத்தருள் கொள்கையோய் போற்றி
குன்றலில்லா அருட் குணத்தோய் போற்றி 560

கூடுமெய் யன்பருட் குலவுவோய் போற்றி
கூத்தையுட் கண்டுகூத் தாடுவோய் போற்றி

கூப்பிட் டருள்திரு கொடுப்பவா போற்றி
கூர்மையும் நேர்மையும் கொடுப்பவா போற்றி
கூழாங் கற்கள்கைக் கொண்டனே போற்றி
கூற்றினை வென்றுவாழ் கொற்றவா போற்றி

கெடுதியெல்லாம் தவிர் கேளிரே போற்றி
கெடுமெனைக் கெடாமல் ஆள் கிற்பவா போற்றி
கெட்டியோ என்உட் கேட்பவா போற்றி

கேடில் உவகையாய்க் கிட்டினுய் போற்றி 570

கேந்திரம் காட்டிய கிருபையோய் போற்றி
கேளாய்க் கேள்வனுய்க் கிளர்ந்தனை போற்றி
கேள்வியின் பயனெனக் கிட்டினை போற்றி

கைகண்ட பலனெனக் காண்பவா போற்றி
கைகுவிப் போருட் கலந்தவா போற்றி
கைகூடு மாறெனுட் காட்டுவை போற்றி
கைகொடுத் தீர்த்தெனைக் காப்பவா போற்றி
கைங்கரியம் செயக் காட்டுவை போற்றி
கைப்பிலா இனிப்பைக் காட்டுவை போற்றி
கைம்மாறு கருதாக் கடமையோய் போற்றி 580

கையடை யாம் எனைக் காப்பாய் போற்றி
கைலாயம் என்னுட் காட்டுவை போற்றி
கைவல்லிய நிலை கண்டனை போற்றி
கைவிடா தெனையும் காப்பாய் போற்றி

கொடியாம் எனைக்கொள் கொம்பே போற்றி
கொடுமுடியில் திகழ் கோனே போற்றி
கொடுமை தவிர்த்தாள் கொற்றவ போற்றி
கொடைமிக உடை அருட் குணனே போற்றி
கொட்புற் றெனையாள் நட்பே போற்றி
கொண்டலை நிகர் அருட் கோலமே போற்றி 590

கொதித்திடு கோபம் குமைப்பாய் போற்றி
கொலு வீற்றிருக்கும் குருவே போற்றி
கொழுந்துறும் அறிவுட் கொளுத்துவை போற்றி
கொள்கை குறித்ததிற் கூட்டுவை போற்றி

கொள்ளைகொள் கெனஅருள் கொடுப்போய் போற்றி
கொற்றம் நிச்சயம் எனக் கூறுவை போற்றி

கோடுதல் இல்லாக் குணத்தாய் போற்றி
கோட்டையைக் கோனை உட் காட்டுவை போற்றி
கோணு தருளைக் கொடுப்போய் போற்றி
கோதிலாப் பேரருட் குருவே போற்றி

கோபம் கொளாதருள் குருபரா போற்றி
கோபுரக் கோயில் கொள் குருமணீ போற்றி
கோயிலாய் என்னுளம் கொண்டனை போற்றி
கோரிய எலாம் தரும் கொற்றவா போற்றி
கோலோச்சி ஆண்டருள் கோவே போற்றி
கோள் நாள் பேய்துனி குலைப்போய் போற்றி

கௌரி சேய் அருளுருக் கண்டனை போற்றி
சகஜ நிட்டையை அருள் சாதுவே போற்றி
சகஸ்ர நாமம் கொளும் சதுரா போற்றி
சகல கலைப்பொருள் சாற்றுவோய் போற்றி

சகுணநிர்க் குணமாய் சமைந்தனை போற்றி
சங்கற்பம் ஏதுமில் சாந்தனே போற்றி
சச்சிதா னந்தமாம் தத்வனே போற்றி
சஞ்சிதத்தைச் சுடும் சற்குரு போற்றி
சட்சு தீட்சை செயும் சாமியே போற்றி
'சட்டம்' என் றருள்நெறி தந்தனை போற்றி
சத்திமிக் குடையமெய்ச் சாதுவே போற்றி
சத்தியத் தின்திறம் சாற்றினை போற்றி
சத்துவம் கனிந்தொளிர் தத்துவா போற்றி
சந்தப் பாடல்கள் தந்தனை போற்றி

சந்தனக் காப்புகொள் சாத்விகா போற்றி
சந்தேகம் தவிர் சற்குணா போற்றி
சந்தோஷம் தரும் சம்ப்ரமா போற்றி
சபையிற் சிறந்தொளிர் தலைவனே போற்றி
சமஸ்தமும் உணர்ந்த சாமர்த்யனே போற்றி
சமய பேதச் சழக் கொழித்தோய் போற்றி
சமயம் அனைத்தின் சாரமே போற்றி
சமரச உணர்வருள் சான்றோய் போற்றி

சமாதியின் சிறப்பைச் சாற்றினே போற்றி
சமுதாயத்தைத் திருத்தினே போற்றி 630

சம்பரதா யத்தைச் சாற்றினே போற்றி
சம்பூர்ண ஞானம் தருவாய் போற்றி
சரணுர விந்தம் தருவோய் போற்றி
சரவணக் குரிசிலுட் சார்ந்தாய் போற்றி
சரளமாய்க் கவிபல சாற்றினே போற்றி
சராசரம் அனைத்தையும் தாங்குவை போற்றி
சர்க்கரை யாகி இனிப்பாய் போற்றி
சர்வ சித்திகளும் உடையாய் போற்றி
சர்வஞ்ஞத்துவத் தந்தாய் போற்றி
சர்வ த்யாக சொரூபா போற்றி 640

சலனமில் உள்ளம் சார்வோய் போற்றி
சன்னிதா னத்திற் கழைப்போய் போற்றி
சன்னிதி சுகத்தைத் தருவாய் போற்றி
சாகா பிறவாச் சதுரா போற்றி

சாட்சாத் காரம் தருவாய் போற்றி
சாட்சியாய் அனைத்திலும் சார்வாய் போற்றி
சாதனம் அனைத்தும் தருவாய் போற்றி
சாதனேக்குப் பயன் தருவாய் போற்றி
சாதி வேற்றுமைகள் தவிர்த்தாய் போற்றி
சாதுசங் கத்தின் தலைவா போற்றி 650

சாத்திரத் துட்பொருள் சாற்றினே போற்றி
சாந்தமே உருவாய்ச் சமைந்தாய் போற்றி
சாபல்ய மார்க்கம் தந்தனே போற்றி
'சாமி' யென் றெவரையும் சாற்றினே போற்றி
சாமீப்பிய சுகம் தருவாய் போற்றி
சாம்ப சிவத்தினுள் தழைவாய் போற்றி
சாயுஜ் ஜியநிலை தருவாய் போற்றி
சாரமாம் திருநெறி தந்தனே போற்றி
சாலச் சிறந்த சற்குரு போற்றி
சால்பு மிகுந்த தயாளா போற்றி 660

சாற்றரி தான தவத்தோய் போற்றி
சான்ருேர் பலர்புகழ் தக்கோய் போற்றி

சிட்டர்கள் போற்றும் சீலா போற்றி
சிதாகா சத்தில் திளைப்போய் போற்றி
சித்த சுத்தியினைத் தருவோய் போற்றி
சித்தாந் தத்தின் தெளிவே போற்றி
சித்தர்கள் போற்றருட் சித்தா போற்றி
சித்துரு வாகித் திகழ்வாய் போற்றி
சிந்தனைக் கெட்டாச் சிறப்போய் போற்றி
சிந்தா மணியாம் சீரோய் போற்றி 670

சிந்தைக் கினிய சிநேகா போற்றி
சிரேஷ்டர்கள் போற்றுஞ் சிரோமணி போற்றி
சிரேயஸ் அளிக்கும் தேவே போற்றி
சிவஞானப் பெருஞ் செல்வா போற்றி
சிறுமை யனைத்தும் சிதைப்போய் போற்றி
சிற்பம் செறிதளி திகழ்வாய் போற்றி
சிற்பர தத்துவ சித்தியே போற்றி
சிற்றம் பலநடம் காட்டுவை போற்றி
சின்முத் திரைகொள் சீரிய போற்றி

சீடருள் எனையும் சேர்த்தாய் போற்றி 680

சீமான் எனஉள் திகழ்வாய் போற்றி
சீர்பாத தீர்த்தம் தருவாய் போற்றி
சீலம் வழங்கருட் சீலா போற்றி
சீவ காருண்யச் செம்மலே போற்றி
சீவன் முத்தனுய்த் திகழ்வோய் போற்றி
சீற்றமுரு விறற் சீயமே போற்றி

சுகம்அனைத் தும்தரும் ஜோதியே போற்றி
சுசியுடைத் தூய சுகிர்தா போற்றி
சுடர்விடு ஞான சூரியனே போற்றி
சுதர்மம் விளக்கிய தூயா போற்றி 690

சுத்த சைதன்ய சொரூபா போற்றி
சுந்தர மனத்துள் துலங்குவை போற்றி
சுபாவம் அனைத்தும் துலக்குவை போற்றி
சுப்பிர மண்ணிய ஜோதீ போற்றி
சுப்பு ராமற்கருள் சுரப்போய் போற்றி

சுமதி கொடுத்தாள் சுந்தர போற்றி
சுமனஸ் அளிக்கும் சுமுகா போற்றி
சுயம் பிரகாச சொரூபா போற்றி
சுரந்தரு ஷூட்டும் சுரபியே போற்றி
சுருக்கமும் விளக்கமும் ஆனாய் போற்றி 700

சுருதி யுக்தியின் அனுபவமே போற்றி
சுவாமி நாதன்உளம் சூழ்ந்தனை போற்றி
சுவானு பூதிமிகும் தூயோய் போற்றி
சுவையில் மேலாம் அருட் சுவையே போற்றி
சுழுமுனை முடிவிற் சுகிப்போய் போற்றி
சுற்றமாய் எங்கணும் சூழ்வோய் போற்றி
சூக்குமத் துள்ளொளிர் சூக்குமம் போற்றி
சூடா மணியாய்த் துலங்குவை போற்றி
சூத்திர தாரியாம் சொக்கனே போற்றி
சூத்திரம் சாத்திரம் சொலவலோய் போற்றி 710

சூரிய சந்திர சோபையே போற்றி
சூழிருந் துன்பம் துடைப்போய் போற்றி
ஜெகஜ்ஜோதி யாகத் திகழ்வாய் போற்றி
ஜெகத்குரு வாகிச் சிறந்தனை போற்றி
செங்கமலச் சேவடியாய் போற்றி
செங்கோல் செலுத்தியாள் சிற்பர போற்றி
செஞ்சொல் வழங்குசொற் செல்வா போற்றி
செந்தமிழ்க் கவிபல செப்பினை போற்றி
செந்நெலாய்க் கன்னலாய்ச் செழிப்பாய் போற்றி
செப்பமார் செயல்பல செய்வாய் போற்றி 720

செம்பொருட் டெளிவாய்த் திகழ்வாய் போற்றி
செம்மைசால் மனத்தெம் செம்மலே போற்றி
செயல்திறன் வழங்கு தேசிகா போற்றி
செயிர்தீர் ஞானச் செழிப்பே போற்றி
செய்யுள் தொடையணி சிறப்போய் போற்றி
செய்யென மனத்தைச் செய்வாய் போற்றி
செல்வமெல் லாம்தரும் செல்வா போற்றி
செல்வாக் குடைஅருட் செல்வா போற்றி
செழுமையும் வளமும் சேர்ப்பாய் போற்றி
சென்னியிற் சேவடி சேர்ப்பாய் போற்றி 730

சேகரித் தற்கருஞ் செல்வமே போற்றி
சேட்டையெல் லாம்தவிர் செம்மையே போற்றி
சேணில் விளங்கருள் தீபமே போற்றி
சேது ராமன்துதி செம்மலே போற்றி
சேம நிதியெனத் திகழ்வாய் போற்றி

சைவ உணவுணச் சாற்றுவை போற்றி

சொக்கத் தங்கமாய் ஜொலிப்பாய் போற்றி
சொத்தெலாம் எனஉட் சூழ்ந்தனே போற்றி
சொப்பனத் திற்சில சொல்லுவை போற்றி
சொர்க்கம் இங்கருளும் தூயோய் போற்றி 740

சொலற்கருஞ் சொல்பல சொற்றனே போற்றி
சொல்வளம் மிகுந்தசொற் சுந்தரா போற்றி

சோடசாந் தத்தில் துலங்குவை போற்றி

சௌபாக் கியம்தரு சௌந்தரா போற்றி

ஞாயி றெனத்திகழ் நல்லோய் போற்றி
ஞாலமெல் லாம்புகழ் ஞானீ போற்றி
ஞானக் காட்சிநல் கிடுவோய் போற்றி
ஞான சாதனங்கள் நவில்வோய் போற்றி
ஞான சுகம்தரும் நாதா போற்றி
ஞான தீட்சைபுரி நாயகா போற்றி 750

ஞானூர்த் தங்கள் நவில்வோய் போற்றி

தகவனைத் தும்தரும் தக்கோய் போற்றி
தஞ்சம் என்போரைத் தாங்குவை போற்றி
தடையெலாம் நீக்கியாள் தன்மையோய் போற்றி
தணிப்பருங் காமம் தணிப்போய் போற்றி
தண்டமிழ்த் தொடையணி சாத்விகா போற்றி
தண்ணளி மிகுந்தொளிர் சற்குண போற்றி
தத்துவா தீதத் தலத்துளாய் போற்றி
தயைமிகுந் திலங்கும் தற்பரா போற்றி
தருணம் அறிந்துசார்ந் தாள்வாய் போற்றி 760

தவநெறி எனக்கும் தருவாய் போற்றி
தவறுகள் பலவும் பொறுப்பாய் போற்றி

தழல்நிகர் ஞானம் தருவாய் போற்றி
தழைவுறு திருவருட் சக்தியே போற்றி
தளர்விலா மனத்தில் தங்குவோய் போற்றி
தளையனைத்தும் தவிர் சான்றோய் போற்றி
தள்ளரும் அன்பாய்த் தழைவாய் போற்றி
தனியர சியற்று தபோதனா போற்றி

தாசனும் எனையும் தாங்குவை போற்றி
தாமதியா தருள் தருவாய் போற்றி 770

தாரக போஷக போக்யமே போற்றி
தாராளமாய் அருள் தருவாய் போற்றி

திசைதொறும் பெருகுபே ரிசையினாய் போற்றி
திடஞானம் தரு தீர்த்தா போற்றி
திட்டம் வழங்கியாள் தேசிகா போற்றி
திண்ணிய தவமுடைச் சிற்சுகா போற்றி
தித்திக்கும் தீம் பண்டமே போற்றி
திமிரம் அகற்றுசெந் தீயே போற்றி
தியாகமே வடிவாய்த் திகழ்வாய் போற்றி
தியான நெறிதரும் தேசிகா போற்றி 780

திரண்டிடும் அடியார் திருவே போற்றி
திரிகாலமும் உணர் தேசிகா போற்றி
திரிபுர தகனம் தெரிந்தனை போற்றி
திருக்கதவம் திறந்தருள்வாய் போற்றி
திருஷ்டாந்தம் காட்டித் திருத்துவோய் போற்றி
திருஷ்டியால் வினைவலி சிதைப்போய் போற்றி
திருநீற் றருமை விளக்கினை போற்றி
திருவடி ஞானம் தருவோய் போற்றி
திருவடி தீட்சை தருவோய் போற்றி
திருவடி நீழல் தருவோய் போற்றி 790

திருவடிப் பூசைகொள் தேசிக போற்றி
திருவடி வேட்கை தருவோய் போற்றி
திருவருட் சட்டம் தந்தோய் போற்றி
திருவருட் செங்கோல் செலுத்துவை போற்றி
திருவருட் ஜோதி காட்டுவை போற்றி
திருவிடை மருதூர்த் திகழ்ந்தனை போற்றி

திருவிளை யாடல்கள் செய்வோய் போற்றி
திரைகள் அனைத்தையும் நீக்குவை போற்றி
திரோபவம் நீக்கி யருள்வோய் போற்றி
தில்லையை உட்காண் தேசிக போற்றி 800

திறமை அனைத்தையும் ஈவோய் போற்றி

தீட்சணி யமுடன் திகழ்வோய் போற்றி
தீட்சை யனைத்தும் செய்வோய் போற்றி
தீபச் சுடராய்த் திகழ்வோய் போற்றி
தீமை யனைத்தும் தீய்ப்பாய் போற்றி
தீமை யுணர்த்தித் திருத்துவை போற்றி
தீராப் பிணிபல தீர்ப்பாய் போற்றி
தீர்க்க தரிசியாய்த் திகழ்வாய் போற்றி
தீர்த்தமும் நீறும் தருவோய் போற்றி
தீனபந்து எனத் திகழ்வாய் போற்றி 810

துகளில்பே ரொளியாய்த் துலங்குவை போற்றி
துட்டரை யும்திருத் திடுவோய் போற்றி
துணையாய் என்பால் சூழ்வோய் போற்றி
துதிக்கும் உளத்துள் தோய்வோய் போற்றி
துய்த்திட உய்த்தருள் தூயோய் போற்றி
துரியா தீதச் சுடரே போற்றி
துரும்பைந் தொழில்செயத் தூண்டுவை போற்றி
துருவம் போலொளிர் துங்கா போற்றி
துலக்கம் மிகுந்தொளிர் இலக்கே போற்றி
துலைபோல் நடுநிலை உடையோய் போற்றி 820

துவாதசாந் தத்தின் ஜோதியே போற்றி
துவிதாத் துவிதம் துலக்குவை போற்றி
துழாயின் பெருமை சொற்றாய் போற்றி
துளக்கமில் விளக்கமாய்த் தோன்றினை போற்றி
துள்ளல் தவிர்த்தாள் தெள்ளிய போற்றி
துறந்தார் பெருமை துலக்குவை போற்றி

தூக்கம் தவிர்அருள் ஊக்கமே போற்றி
தூண்டா விளக்கின் ஜோதியே போற்றி
தூபதீ பாரத்தி கொள்வோய் போற்றி
தூபிகொள் ஆலயச் சுடரே போற்றி 830

தூயவர் தேடும் சொத்தே போற்றி
தூய்மையுள் தூய்மையாய்ச் சுடர்வோய் போற்றி
தூரிய ஒலிநடுத் தோன்றுவை போற்றி
தூர்த்தர்கண் டறியாத் தீர்த்தனே போற்றி
தூலசூக் குமமாய்த் தோன்றுவை போற்றி

தெப்பமாய்க் கரைக்கண் சேர்ப்போய் போற்றி
தெய்விக எழிலுடன் திகழ்வோய் போற்றி
தெய்விகப் புலமைசால் தேசிகா போற்றி
தெவிட்டாத ஞானத் தெளிவே போற்றி
தெளிவெமக் கிந்தருள் சீரிய போற்றி 840

தெற்றென விளக்கம் செப்புவை போற்றி

தேஜோ மயமாய்த் திகழ்வோய் போற்றி
தேடரி தாம்திர வியமே போற்றி
தேவசம் பத்தினைச் சேர்ப்போய் போற்றி
தேவைகள் குறையச் செய்வோய் போற்றி
தேருரையும் நனி தேற்றுவை போற்றி
தேற்றம் அளித்துத் தெருட்டுவை போற்றி
தேனுய் அமுதாய்ச் செறிவாய் போற்றி

தைரியம் மிகமிகத் தருவாய் போற்றி

தொகுத்து நல்லவற்றைச் சொற்றுய் போற்றி 850

தொடர்பவப் பிணியைத் தொலைப்போய் போற்றி
தொடைபல பூண்டொளிர் தொல்லோய் போற்றி
தொண்டர்கள் துன்பம் துடைப்போய் போற்றி
தொண்டின் பெருமை துலக்குவை போற்றி
தொந்தரை நீக்கும் சுந்தர போற்றி
தொழுவோர் குழுவுள் துலங்குவை போற்றி

தோத்திர மாலை சூடுவை போற்றி
தோயும் உளம்வாழ் தூயவ போற்றி
தோன்றுத் துணையாய்ச் சூழ்ந்தோய் போற்றி

தௌர்ப்பாக் கியத்தைத் தவிர்ப்போய் போற்றி 860

நசைதவிர்த் தன்புள் நாட்டுவை போற்றி
நடன தரிசனம் காட்டுவை போற்றி

நடுநிலை பிறழா நல்லோய் போற்றி
நடையைத் திருத்தியாள் நாயக போற்றி
நபிநாயகன் மொழி நவில்வோய் போற்றி
நம்பும் அன்பரையாள் நம்பியே போற்றி
நயமொடும் உண்மை நவில்வோய் போற்றி
நரசிம்ம வேள்பணி நாடினை போற்றி
நலமெலாம் தருநெறி நல்கினை போற்றி
நவமணிக் குவைபோல் நண்ணினை போற்றி 870

நவிலரு மந்திரம் நவில்வோய் போற்றி
நளவரு டத்தில் தோன்றினை போற்றி

நாடகம் வாழ்வென நவில்வோய் போற்றி
நாடிநோய் தீர்த்தருள் நல்குவை போற்றி
நாடும் உளத்தினை நாடுவை போற்றி
நாதனாய் வந்தமை நல்லோய் போற்றி
நாதவிந்து கலாதீதா போற்றி
நாதாந்த ஜோதி நடுவுளாய் போற்றி
நாயடியேன் உளம் நண்ணினை போற்றி
நால்வகைத் தொடர்பையும் உடையாய் போற்றி 880

நாவடக் கிச்சுகம் நல்குவை போற்றி

நிகழ்ச்சியில் உண்மைகள் காட்டுவை போற்றி
நிகழ்வன முன்னர் உணர்த்துவை போற்றி
நிஷ்கா மியத்தில் நிலைத்தோய் போற்றி
நிஷ்டையில் இன்பம் நிறைப்போய் போற்றி
நிதர்சனமாய்ப் பயன் காட்டுவை போற்றி
நிதியென என்னுள் நிறைந்தனை போற்றி
நிபுணர் எலாம்புகழ் நிலையோய் போற்றி
நியமம் யிறழா நெறியினை போற்றி
நிரஞ்ச னானந்த சொரூபா போற்றி 890

நிர்க்குண சூஷ்ம நிருபண போற்றி
நிவேதனம் ஏற்றருள் நிமலா போற்றி
நிறையின்பம் தரும் நித்தா போற்றி

நீக்கமொன் றறியா நிறைவே போற்றி
நீங்கா தென்னுள் நிலைப்போய் போற்றி

நீதியின் உருவாய் நின்றோய் போற்றி
நீத்தார் குழுபணி நின்மல போற்றி
நீரின் மகிமைசொல் நேர்மைய போற்றி
நீர்மை யறிந்தருள் நேர்வாய் போற்றி
நீள்பவம் மாற்றும் நிராமய போற்றி 900

நுகர்வரும் இன்பம் நுகர்வோய் போற்றி
நுட்பப் பொருளை நுவல்வோய் போற்றி
நுணுக்கம் உணர்த்தருள் நோக்கே போற்றி

நூதன மேவு புராதன போற்றி
நூலுட் பொருளாம் நுண்ணிய போற்றி
நூல் முடிவாயொளிர் நோன்மை போற்றி

நெக்குரு கச்செய் நெருப்பே போற்றி
நெருங்கி யருள்புரி நீர்மை போற்றி
நெற்றியின் நடுத்திகழ் நிதியே போற்றி

நேமமும் நிட்டையும் ஈவோய் போற்றி 910

நேயமொ டெனையாள் நிருபா போற்றி
நேர்த்தி மிகுந்தொளிர் மூர்த்தீ போற்றி

நைதல் தவிர்த்தருள் நம்பா போற்றி

நொடியில் அருள்புரி நோக்கம் போற்றி

நோய்பல தீர்த்தருள் நோன்பே போற்றி

*நௌவென வந்தருள் நாதா போற்றி

பகலிர வறியாப் பகவா போற்றி
பக்குவ மிக்கருள் பண்பே போற்றி
பக்திக் கீர்த்திடு பரிசே போற்றி
பக்தியிற் பழுத்தநற் பழமே போற்றி 920

பணியளித் தின்பம் பயப்போய் போற்றி
பணிவின் சொல்தரு பாங்கே போற்றி
பதியுணர் வருளும் பரமா போற்றி

*நௌ-மரக்கலம்

பந்தமெலாம் தவிர் பான்மையோய் போற்றி
பரமயோ கியர்பெருந் தலைவா போற்றி
பரமா னந்தப் பரிசே போற்றி
பரிபாஷைகள் பல பகர்வோய் போற்றி
பலதிற யோகப் பயனே போற்றி

பாண்டிய நாட்டில் தோன்றினை போற்றி
பார்க்கருள் ஒளிதரு பருதியே போற்றி

பார்ப்பவர் கண்குளிர் உறவே போற்றி
பார்வையாற் பாவம் பாற்றுவை போற்றி
பார்வையில் ஈரமிக் குடையாய் போற்றி
பாவம் மன்னித்தருள் பார்த்திப போற்றி

பிரணவ பஞ்சாக்ஷரப் பிரமமே போற்றி
பிரமஞா னம்தரு பெரியோய் போற்றி
பிறப்பிறப் பறஅருள் பிரானே போற்றி

பீஜாக்ஷரமாய்ப் பிறங்குவை போற்றி
பீடம் நன்மனமெனும் பெற்றியோய் போற்றி
பீடு நிறைந்தொளிர் பெம்மான் போற்றி

புகல் அளித்தாளும் புனிதா போற்றி
புகழை விரும்பாப் பூரண போற்றி
புடமிடு பொன்நிகர் போதா போற்றி
புணர்வரும் இன்பம் புணர்ப்போய் போற்றி
புண்ணியர் தேடும் பொருளே போற்றி
புதையலாய் என்னுட் பொலிவாய் போற்றி
புரளாதவருட் புணர்வோய் போற்றி
புலருமுன் எழுப்பும் புண்ணிய போற்றி
புறம்அகம் உணர்த்தும் போதக போற்றி

பூஷணமாய் அருள் பூண்டாய் போற்றி

பூட்டைத் திறந்தருள் புராணு போற்றி
பூநிகர் மனம்வாழ் புனிதா போற்றி
பெத்தரை முத்தராக் கிடுவோய் போற்றி
பெரிதினும் பெரிதாய்ப் பிறங்குவை போற்றி
பெரியவர் போற்று பிரானே போற்றி

பெற்றி யெலாம்தரு பெரியோய் போற்றி

பேதைமை தவிர்க்கும் பெற்றியோய் போற்றி
பேறெலாம் வழங்கும் பிரபுவே போற்றி

பையுள் தவிர்த்தருள் பரனே போற்றி

பொதிகையில் மெய்த்தவம் புரிந்தோய் போற்றி 960

பொய்தவிர் மெய்ந்நெறி புகல்வோய் போற்றி
பொறுமையின் வடிவாய்ப் பொலிவோய் போற்றி
பொற்பு மிகுந்தொளிர் பொன்னே போற்றி

போகமெலாம் தரு பொருளே போற்றி
போகொணு வகைபுகுந் தாண்டாய் போற்றி
போதாந் தத்தின் பொலிவே போற்றி
போராட்டம் தவிர் புனிதா போற்றி

பௌதிக உண்மை பகர்வோய் போற்றி

மகிமை மிகுந்தொளிர் மாண்பே போற்றி
மங்கள வாழ்வருள் மகிபா போற்றி 970

மடிமிடி நீக்கிடு மன்னு போற்றி
மண்பெண் பொன்நசை மாய்ப்போய் போற்றி
மதிப்பரு மனமணி விளக்கே போற்றி
மதிமண் டலத்தமு தருள்வாய் போற்றி
மதுரித கவியருள் மாண்பே போற்றி
மதுரையில் அருளை வளர்த்தோய் போற்றி
மருந்தருந்தா நெறி வகுத்தோய் போற்றி
மர்மமெல்லாம் விளக்கிடுவோய் போற்றி
மலபரி பாகம் வழங்குவை போற்றி
மழைபோல் திருவருள் பொழிவோய் போற்றி 980

மறுமையை இம்மையிற் காட்டுவை போற்றி
மறையின் உட்பொருள் நவில் மாண்போய் போற்றி
மனக்கதவைத் திறந்தருள்வோய் போற்றி
மனையறம் விளக்கிடு மாண்பே போற்றி
மனோலயம் ஈந்தருள் மகிபா போற்றி

மாட்சிமை மிக்குடை மன்னு போற்றி
மாணிக்கப் பெருமலையே போற்றி
மாதவம் மிகுந்தொளிர் மாண்போய் போற்றி
மாயையை வென்றொளிர் மாதவா போற்றி
மாரியம்மையை மணம் புரிந்தனே போற்றி 990

மாற்றறி யொண்ணுப் பசும்பொனே போற்றி

மித்திரனாகி மிளிர்வாய் போற்றி

மீகாமன் எனத் திகழ்வாய் போற்றி
மீளா நெறியை விளக்குவை போற்றி

முடிவாம் ஒருநெறி மொழிவோய் போற்றி
முத்தர்கள் போற்றும் மோனீ போற்றி
முத்திப் பேறருள் மூர்த்தீ போற்றி
முத்துசாமிக் கருள் முத்தே போற்றி
மும்மை மலங்கள் முறிப்போய் போற்றி
முழுமைச் சுகம் அருள் முதல்வா போற்றி 1000

மூலத்தானம் திகழ் மூர்த்தீ போற்றி
மூலபண்டாரம் வழங்குவை போற்றி
மூலமந்திரம் உள் மொழிவாய் போற்றி

மெய்ப் பொருளாகி மிளிர்வாய் போற்றி
மெய்யுணர் வருளும் மேலோய் போற்றி

மேல் நோக்கம் தர விழைவோய் போற்றி
மேன்மையெல்லாம் தர மேவினை போற்றி

மையல் தவிர்க்கும் மருந்தே போற்றி

மொழியுணர் வறியா முதலே போற்றி

மோன மறைநவில் முத்தா போற்றி 1010

மௌட்டியம் நீக்கிடு மௌனீ போற்றி

ரகசியம் அனைத்தும் இயம்புவை போற்றி
ரசனையுட்காட்டி ஈர்த்திடுவாய் போற்றி
ரஞ்சித மாகஉள் ரமிப்பாய் போற்றி

ரட்சணையாக இருப்பாய் போற்றி
ரத்தினம் ஒத்தொளிர் மொழியோய் போற்றி
ரம்பமாய் வினைகளை யீர்வாய் போற்றி
ரவியாய் இருளை இரிப்பாய் போற்றி

ராகதோஷாதி இகந்தோய் போற்றி
ராஜஸ தாமஸம் இலாதாய் போற்றி 1020

லகுவாய் அடியரைச் சேர்ப்போய் போற்றி
லங்கணம் மௌனமொ டீவாய் போற்றி
லயமுறு மனதமை எழிலே போற்றி
லாகவமாய் நெறிக் கீர்ப்பாய் போற்றி

லாகிரி வெறிதவிர் இறைவா போற்றி
லாபம் தந்தரு கீர்ப்பாய் போற்றி
லாவண்யம் மிக்க இயல்போய் போற்றி

லீலைகள் அருளால் இயற்றுவை போற்றி

லௌகிக ஆத்மிக இணைப்பே போற்றி

வழிகாட்டும் வான் பொருளே போற்றி 1030

வளமெலாம் தருநெறி வகுத்தனை போற்றி
வற்புறுத்திச் சுகம் தருவோய் போற்றி

வாட்டமில் மனம்தரும் வள்ளால் போற்றி
வாயில் திறந்தழைத் தருள்வோய் போற்றி

விகற்பம் அனைத்தும் விலக்குவை போற்றி
விநாயகன் அருளை விளக்குவை போற்றி
விரிவுரை போதம் விளம்பினை போற்றி
விரிவுறு மனத்தை ஒடுக்குவை போற்றி
விவிலிய வேதம் விளக்கினை போற்றி
விழுமிய பேரருள் விளைப்போய் போற்றி 1040

விற்பனர்க் கெல்லாம் உற்பனு போற்றி

வீரபத் திரர்குல விளக்கே போற்றி
வீறுடு வீற்றிருந் தாள்வோய் போற்றி

வெம்மை யெலாம்தவிர் செம்மையே போற்றி
வெளியினுள் விளங்குபே ரொளிமயம் போற்றி

வேகம் தவிர்த்தாள் விமலனே போற்றி
வேண்டுவ தெலாம் தரும் வித்தகா போற்றி
வேதாந்த நாடாள் வேந்தனே போற்றி
வேளூர் விழாக்கொளும் விக்ரமா போற்றி

வைகைநீ ராடிய வள்ளலே போற்றி
வைராக் கியம்தரும் வல்லபா போற்றி 1051

நானுவித திவ்யபரிமள மந்த்ர
புஷ்பாணி சமர்ப்பயாமி.


ஓம் ஓம் ஓம்

வாழ்த்து

(அறுசீரடி யாசிரிய விருத்தம்)

அன்புருக் கொண்டு போந்த அருட்குரு நாதன் வாழ்க
துன்பெலாம் நீக்கி யுண்மை துலக்கருட் சட்டம் வாழ்க
பொன்புகழ் புனிதம் எய்திப் பொலிந்தடி யவர்கள் வாழ்க
இன்பமார் இருடிப் பட்டி எழிற்பதி வாழ்க வாழ்க.

———



ஸ்ரீ அருள் சக்தி அன்னை

ஸ்ரீ குரு பாதம் துணை

ஸ்ரீ அருள்சக்தி அன்னை ஷோடச நாம அர்ச்சனை

[அர்ச்சனை செய்கையில் ஒவ்வொரு நாமத்திற்கு முன்னும் 'ஓம்' என்னும் பிரணவத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.]

ஓம் ஸ்ரீ அருள்சக்தி அன்னை பாதாரவிந்தயோ:
ஷோடச நாமார்ச்சன பூஜாம் கரிஷ்யே.

அருளே போற்றி, அறமே போற்றி,
தெருளே போற்றி, திறமே போற்றி,
அகமே போற்றி, அறிவே போற்றி,
இகமே போற்றி, எழிலே போற்றி,
தவமே போற்றி, தகவே போற்றி,
புகழே போற்றி, பொலிவே போற்றி,
சத்தே போற்றி, சித்தே போற்றி,
பொருள் விளக்கம்தரு பொன்னே போற்றி,
அருள்வினை வேற்றிடும் அன்னே போற்றி,

நானுவித திவ்ய பரிமள மந்த்ர புஷ்பாணி சமர்ப்பயாமி.

ஓம் ஓம் ஓம்

ஸ்ரீ குரு பாதம் துணை

ஸ்ரீ அருள் சக்தி அன்னை
அஷ்டோத்தர சத நாம அர்ச்சனை

[அர்ச்சனை செய்கையில் ஒவ்வொரு நாமத்திற்கு முன்னும் 'ஓம்' என்னும் பிரணவத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.]

ஓம் ஸ்ரீ அருள்சக்தி அன்னை பாதார விந்தயோ:
அஷ்டோத்தர சதநாமார்ச்சன பூஜாம் கரிஷ்யே.

அருட்சட் டம்வளர் அன்னையே போற்றி
ஆர்வ மிகத்தரும் ஆற்றலே போற்றி
இம்மையும் மறுமையும் என்றுளாய் போற்றி
ஈட்டுமெய்த் திருவின் தேட்டமே போற்றி
உண்மையை விளக்கும் திண்மையே போற்றி
ஊக்கம் உண்டாக்கிடும் ஆக்கமே போற்றி
எமையெலாம் காக்கும் இறைவியே போற்றி
ஏற்ற மிகும்தவத் தோற்றமே போற்றி
ஐம்பொறி களைவெலும் ஆற்றலே போற்றி
ஒருநெறிக் கீர்த்தமு தூட்டுவை போற்றி 10

ஓமெனும் மந்திரம் ஓதுவை போற்றி
ஔவைபோல் நல்லுணர் வருளுவை போற்றி
அஃகலில் திருவென் றமைந்தனை போற்றி
கண்பெறக் கருணை காட்டுவை போற்றி
ஙப்போல் எமையாள் பொற்பே போற்றி
சக்தி அனைத்தும் தரவலாய் போற்றி
ஞயம்பட உரைக்குமெய்ஞ் ஞானமே போற்றி
டம்பமில் லாதொளிர் தன்மையே போற்றி
ணகரம் போல்வணக் கிடுவாய் போற்றி
தக்கவர் புகழும் பக்குவம் போற்றி 20

நன்மை யெலாம்தரும் ஞாயிறே போற்றி
பக்தியின் வடிவாய்ப் படர்ந்தனை போற்றி

மனம் அடங்கப்புரி மாட்சியே போற்றி
யக்ஞம்மெய்த் தவமெனும் மஞ்ஞையே போற்றி
ரந்திரம் அறியும் தந்திரம் போற்றி
லங்கணம் ஏற்கும் லாவண்யமே போற்றி
வழியினை விளக்கும் வான்பொருள் போற்றி
அழகருள் என்றுணர்த் தாட்சியே போற்றி
அளவில்மெய் யடியார்க் கரசியே போற்றி
அறத்தின் பயன்என அமைந்தனை போற்றி 30

அனவரதமும் தவம் ஆற்றுவை போற்றி
கதிபெற அழைக்கும் கருணையே போற்றி
காணரி தாம்தவக் காட்சியே போற்றி
கிருபை சுரந்திடும் கேளிரே போற்றி
கீழ்மையெல் லாம்தவிர் மேன்மையே போற்றி
குற்றமும் குணமாக் கொள்ளுவோய் போற்றி
கூற்றினை வென்றொளிர் ஏற்றமே போற்றி
கெடுதியை விலக்கும் கிருபையே போற்றி
கேட்டதெல்லாம் தரும் நாட்டமே போற்றி
கைப்பொரு ளாய்த்திகழ் மெய்ப்பொருள் போற்றி 40

கொடைவடி வாயொளிர் கொள்கையோய் போற்றி
கோபமே காணரும் குணமணீ போற்றி
கௌரிசேய் கருணையைக் காட்டுவை போற்றி
சற்குரு பெருமையைச் சாற்றுவை போற்றி
சாந்தமே வடிவாம் சக்தியே போற்றி
சின்மயம் விளக்கும் செம்மையே போற்றி
சீதநீரின் திறம் செப்புவை போற்றி
சுசிருசி யோடமு தூட்டுவை போற்றி
சூட்சுமம் உணர்த்தும் மாட்சிமை போற்றி
செய்கையைத் திருத்தும் தெய்வமே போற்றி 50

சேமம் எல்லாம்தரும் நேமமே போற்றி
சைலமொத் துள்ளொளிர் தத்வமே போற்றி
சொத்தரு ளாமெனும் சுருதியே போற்றி
சோர்வினைத் தும்தவிர் தூய்மையே போற்றி
சௌபாக் கியம்தரும் தாய்மையே போற்றி
தவம்செயத் தூண்டருட் சக்தியே போற்றி
தாமதி யாதருள் தரவலோய் போற்றி

திருவருள் திருமிகச் சேர்த்துளோய் போற்றி
தீனர்பால் கருணைசெய் ஞானமே போற்றி
துறவுளம் கொண்டொளிர் தோற்றமே போற்றி

தூக்கமில் ஊக்கமாம் ஆக்கமே போற்றி
தெய்விகம் பழுத்தொளிர் செய்கையோய் போற்றி
தேடரி தாம்பெருஞ் செல்வமே போற்றி
தைரியம் ஊட்டும்நல் தாய்மையே போற்றி
தொழுதுயும் வழியைச் சொலவலோய் போற்றி
தோடமே கருதாப் பாடமே போற்றி
தௌர்ப்பாக் கியம்தவிர் சத்யமே போற்றி
நன்மை யனைத்தையும் நல்குவோய் போற்றி
நாதாந்த நாட்டின் நடுவுளோய் போற்றி
நினைக்குமுன் வழங்கும் நேர்மையே போற்றி

நீதியை விளக்கும் ஜோதியே போற்றி
நுட்பம்எல் லாம்உணர் திட்பமே போற்றி
நூல்களின் உட்பொருள் நுவலுவை போற்றி
நெறியினிற் பிறழா நீர்மையே போற்றி
நேமநிட் டையிலே நிலைத்துளாய் போற்றி
நைந்துரு கடியருள் நண்ணுவை போற்றி
நொடியினில் உதவருள் வடிவமே போற்றி
நோற்றலே உயர்வெனச் சாற்றுவை போற்றி
நோக்கம் உள்ளாக்கென நுவலுவை போற்றி
நௌவென விளங்கருள் நாதமே போற்றி

பரிபாஷையின் பொருள் பகருவை போற்றி
பாத்திரம் அறிந்தருள் பான்மையே போற்றி
பிள்ளையார் குப்பப் பெருந்தவம் போற்றி
பீடுசால் நல்லுளம் நாடுவை போற்றி
புனிதரெல் லாம்புகழ் புண்யமே போற்றி
பூரண மானமெய்ப் போதமே போற்றி
பெய்திடு முகில்நிகர் பெற்றியோய் போற்றி
பேதபா வனைதவிர் பெருமையே போற்றி
பைநிறை பொருள்போல் படர்ந்தனை போற்றி
பொற்பெலாம் விளக்கும் சிற்பமே போற்றி

போதமாம் அமுதுட் புகட்டுவோய் போற்றி
பௌவம்நீந் தச்செயும் பண்பினை போற்றி

மதிபொழி யமுதுணும் மாண்பினை போற்றி
மாயையை விலக்கும் மகிமையோய் போற்றி
மிடிதவிர் மார்க்கம் விளம்புவை போற்றி
மீண்டுபிற வாநெறி விளக்குவை போற்றி
முத்தர்கள் போற்றுபுன் முறுவலோய் போற்றி
மூலமந் திரர்உள் முழக்குவோய் போற்றி
மெய்யுணர் வுறவருள் மேதையே போற்றி
மேல்நோக் கம்தரும் விஞ்சையே போற்றி 100

மையல் தவிர்த்தருள் மந்த்ரமே போற்றி
மொழிமனம் செயல்களின் முழுவளம் போற்றி
மோனமாம் கடலினுள் முழுகுவோய் போற்றி
மௌட்டியம் தவிர்த்தருள் வல்லபம் போற்றி
வத்துதத் துவம்நவில் வாய்மையோய் போற்றி
வாசிகண் டருள்திரு வளர்த்தனை போற்றி
விளக்கென எமக்குள் விளங்குவை போற்றி
வீடு பெறப்புரி விபுலமே போற்றி
வெளியினுள் ஒளியுணர் விழுப்பமே போற்றி
வேகம் தவிர்த்தருள் வேதமே போற்றி
வைராக்யம் ஊட்டருள் வண்மையே போற்றி 111

நானாவித திவ்ய பரிமள மந்த்ர புஷ்பாணி சமர்ப்பயாமி

ஓம் ஓம் ஓம்

பூவைக் கொண்டு செய்வது பூசையாகும். பூவிற்கு 'ஸுமனஸ்' என்று ஒரு பெயர் உண்டு. மாசற்ற நல்ல மனமாகிய நறுமலரை இறைவன் திருவடிகளில் இடுவதே மேலான பூசையாகும்.

இறைவனின் திருநாமங்களை நாள்தோறும் அன்புடன் ஓதினால், அதுவே சொல்மலர் சூட்டும் வழிபாடு ஆகும்.

இறைவனை வழிபடுவதால் மனத்திலுள்ள மாசு நீங்கித் தூய்மை உண்டாகும். தூய மனதால் இறைவனை வழிபட்டு, நாமும் நலம் பெற்று, ஞாலத்துக்கும் நலம் விளைப்போமாக.

ஸ்ரீ குரு பாதம் துணை

ஸ்ரீ அருள்சக்தி அன்னை
ஸஹஸ்ர நாம அர்ச்சனை

[அர்ச்சனை செய்கையில் ஒவ்வொரு நாமத்திற்கு முன்னும் 'ஓம்' என்னும் பிரவணத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்]

ஓம் ஸ்ரீ அருள்சக்தி அன்னை பாதார விந்தயோ:
ஸஹஸ்ர நாமார்ச்சன பூஜாம் கரிஷ்யே.

அகண் டாகாரத் தொன்றினை போற்றி,
சகம் காணுத்தவ வொளியே போற்றி
அகத்தினில் அருளென அமர்வாய் போற்றி
இகத்தினில் நன்னெறி யீவாய் போற்றி
அகப்புறப் பற்றை அறுப்போய் போற்றி
சுகப்பொலி வாயொளிர் தூயோய் போற்றி
அகரமும் உகரமும் ஆனாய் போற்றி
சிகர மெனப்பொலி சீரே போற்றி
அகவொளி புறவொளி யாமனை போற்றி
ஜகமிதை வானுல காக்குவை போற்றி 10

அகிலாண் டங்களுக் கரசீ போற்றி
சகல கலைகளின் சாரம் போற்றி
அக்கரத் தொன்றிட அருளுவை போற்றி
திக்கெட் டிலும்நிறை சீரோய் போற்றி
அக்கர நற்பொரு ளானோய் போற்றி
தக்கன நல்கு தபோமணி போற்றி
அங்கண் அளித்தருள் அற்புதம் போற்றி
செங்கண் திறந்தருள் தேவீ போற்றி
அங்கம் அருள்மய மாக்குவை போற்றி
துங்க மிகும்படி புரிவோய் போற்றி 20

அங்கயற் கண்ணனை யானேய் போற்றி
மங்கலில் பேரொளி மணியே போற்றி
அச்சமெலாம் அகற் றரசீ போற்றி
கச்சியில் அருளொளி காட்டுவை போற்றி
அஞ்சல் அளித்தருள் ஆரணி போற்றி
செஞ்சரண் நல்கு சிரோமணி போற்றி
அஞ்ஞானத்தை அகற்றுவை போற்றி
மெய்ஞ்ஞா னம்பெற அருளுவை போற்றி
அடக்க மிகுந்தொளிர் அருளனை போற்றி
இடுக்க ணெலாம்தவிர் இறைவீ போற்றி 30

அடர்புலப் பகையை அறுப்போய் போற்றி
படர்இரு வினைகளைப் பாற்றுவை போற்றி
அடிசில்நன் றடியவர்க்(கு) ஊட்டுவை போற்றி
நொடியில்வந் தருள்புரி நோன்மை போற்றி
அடியரைக் கைவிடா தாள்வாய் போற்றி
மிடிதவிர்த் தருள்செய் விழுப்பம் போற்றி
அடியர் இலந்தொறும் அமருவை போற்றி
உடையுண வருளளித் தோம்புவை போற்றி
அடியவர்க் கருளமு(து) ஊட்டுவை போற்றி
அடியவர்க் கருள்திரு அருளனை போற்றி 40

அடியவர்க் காவன புரிவோய் போற்றி
கொடியவை அணுகா தருளுவை போற்றி
அடியார்க் கெளிதினில் அருள்வோய் போற்றி
படிமிசை அருளைப் பரப்புவை போற்றி
அடைதற் கரியன அருளுவை போற்றி
கடையரை யும்புரந் தருளுவை போற்றி
அட்சர மாயொளிர் அருளனை போற்றி
இச்சை யெலாம்வெறுத் திலகனை போற்றி
அட்டலக் குமியுமொன் றானேய் போற்றி
இட்டசித் தியெலா மீவோய் போற்றி 50

அணுவணு வாயொளி யாக்குவை போற்றி
எணுமுனர் வந்தினி தருளுவை போற்றி

அணைபொறி புலன்களுக் கிடுவோய் போற்றி
துணையென எங்கும் துலங்குவை போற்றி
அண்டம்பல் கோடியும் ஆமனை போற்றி
பண்டு பழுத்தநற் பழமே போற்றி
அண்டரும் அறிவதற் கரியாய் போற்றி
மண்டலத் தருளர சாள்வாய் போற்றி
அதர்மம் நீங்கிட அருளுவை போற்றி
சுதர்மம் வளர்ந்திடச் செய்வோய் போற்றி

அத்தனின் அடிதொழ ஊக்குவை போற்றி
முத்தனென் றுளிரப் புரிவோய் போற்றி
அத்வித உண்மை விளக்குவை போற்றி
சித்சுக வடிவில் திகழ்வோய் போற்றி
அந்தக் கரணம் ஒடுக்குவை போற்றி
சிந்தையில் நற்றெளி வருளுவை போற்றி
அமுதநல் ஊற்றருள் அனையே போற்றி
சுமுகமொ டருள்புரி தூயோய் போற்றி
அமைதியை அடியவர்க் கருள்பரை போற்றி
சுமையெனும் வினைதவிர் தூமணி போற்றி

அம்பர மேவும் அருட்சுடர் போற்றி
இம்பர் எமைப்புரந் தருளுவை போற்றி
அம்பல நாடகம் காட்டுவை போற்றி
எம்பவப் பிணியை விலக்குவை போற்றி
அம்பிகை உருவில் அமைந்தனை போற்றி
செம்பொரு ளுண்மை விளக்குவை போற்றி
அம்மனிடம் கணைக் கறிந்தனை போற்றி
செம்மை மிகப்புரி செந்திரு போற்றி
அயர்வொழித் தாண்டருள் அரசீ போற்றி
உயர்வனைத் தும்தரும் ஒண்மணி போற்றி

அரசி யெனத்திகழ் அனையே போற்றி
பரசிவ உணர்வருள் பரையே போற்றி
அரணென அடியார்க் கமைவோய் போற்றி
கரணத் தூய்மை அளிப்போய் போற்றி

அரிய செயல்பல ஆற்றுவை போற்றி
விரிநிலம் போற்ற விளங்குவை போற்றி
அருட்கொடி யேற்றிடும் அனையே போற்றி
தெருட்பெறு மாறருள் செய்வோய் போற்றி
அருட்சக் திப்பெயர் அம்மே போற்றி
பொருட்குவை யெனவொளிர் பூரணி போற்றி 90

அருந்தவம் பல்லாண் டாற்றினை போற்றி
பெருந்திரு வென்னப் பிறங்குவை போற்றி
அருமறைக் கெட்டரும் அற்புதம் போற்றி
பெருமை யெலாம்தரு பெற்றிமை போற்றி
அரும்பு மலர்ந்திட அருளுவை போற்றி
இரும்பு மனத்தை இளக்குவை போற்றி
அருவமும் உருவமும் ஆனோய் போற்றி
திருவரு ளமுதருள் சீரோய் போற்றி
அருவி யெனப்பொழி அருளே போற்றி
கருவிகள் அருள்மய மாக்குவை போற்றி 100

அருவுரு வாயொளிர் அன்னே போற்றி
பருவபக் குவம்மிகப் புரிவோய் போற்றி
அருளவ தாரம்செய் அனையே போற்றி
பொருளுணர்த் திப்புரந் தருளுவை போற்றி
அருளுணர் வூட்டிநன் றுள்வோய் போற்றி
தெருளளித் தெம்மைத் திருத்துவை போற்றி
அருளுற வாகி அமைந்தனை போற்றி
மருளற உரைகள் வழங்குவை போற்றி
அருள்விருப் பூட்டி அழைப்போய் போற்றி
அருள்வினை வேறிட அருள்வோய் போற்றி 110

அருள்விளை யாடல்கள் ஆற்றுவை போற்றி
பொருள்மிகத் தந்து புரப்போய் போற்றி
அரோசகம் நீக்கிடும் அனையே போற்றி
*சரோருகம் நிகர்திருத் தாளோய் போற்றி
அலைவறி யாமனம் அருளுவை போற்றி
உலைவில் அருள்திரு உதவுவை போற்றி

*சரோருகம்—தாமரை.

அவமறுத் தாண்டருள் அம்பிகை போற்றி
தவவொளி தந்தருள் சாம்பவி போற்றி
அழுதுரு கடியவர்க் கனையே போற்றி
தொழுதுரு கிடஅருள் தூயோய் போற்றி

அள்ளக் குறைவில் அருள்திரு போற்றி
அள்ளிப் பருகரு ளமுதே போற்றி
அறநெறி பிறழார்க்(கு) அரணே போற்றி
திறன் அனைத்தும்தரு சிவையே போற்றி
அறமனைத் தும்வளர்த் தருளுவை போற்றி
திறமனைத் தும்கொடுத் தாளுவை போற்றி
அறிவினைத் திருத்திடும் அற்புதம் போற்றி
நெறியினை விளக்கிடும் நின்மலை போற்றி
அறுகின் உயர்வை விளக்குவை போற்றி
அறுபகை தவிர்வழி அருளுவை போற்றி

அறுபகை களைவெல அருளுவை போற்றி
சிறுமைகள் தீர்த்தருள் செயும்அனை போற்றி
அனலுறு மெழுகென உருக்குவை போற்றி
புனலினில் காலையில் ஆட்டுவை போற்றி
அன்பர்செய் பிழைகள் பொறுப்பாய் போற்றி
பொன்புரை போதம் புகட்டுவை போற்றி
அன்ன நடைகொளும் அம்பிகை போற்றி
நன்னல மிக்கருள் நாயகி போற்றி
ஆகமோர் கோயிலென் றுக்குவை போற்றி
சோக மெலாம்தவிர்த் தருள்வோய் போற்றி

ஆகா மியம்நீக் கருளொளி போற்றி
யோகாம் சங்கள் உணர்த்தனை போற்றி
ஆக்க மெலாம்எமக் கருளுவை போற்றி
நோக்கமுள் ளாக்கென ஊக்குவை போற்றி
ஆங்கா ரத்தை அடக்குவை போற்றி
ஓங்கா ரத்தொலி கூட்டுவை போற்றி
ஆசா நிகளம் அறுப்போய் போற்றி
பேசா நிலையிற் பிறங்கினை போற்றி

ஆசா ரங்கள் கடந்தோய் போற்றி
பூசா பலனுள் ளுணர்ந்தோய் போற்றி 150

ஆசா ரத்தை அருள்வோய் போற்றி
பூசா விதிபல புகல்வோய் போற்றி
ஆசி யளித்தருள் அரசீ போற்றி
வாசி விளேவுற அருளுவை போற்றி
ஆசை குறைவுற அருளுவை போற்றி
தேசு மிகுந்திடச் செய்வோய் போற்றி
ஆடிப் பூரத் தடங்கினே போற்றி
நாடி. எமக்கருள் நல்கனே போற்றி
ஆதர வாயொளிர் அரசீ போற்றி
பாதபங் கயம்அருள் பரையே போற்றி 160

ஆதவன் மதியென ஆனுய் போற்றி
சீதநன் னீரில் ஆட்டுவை போற்றி
ஆதியந் தம்கடந் தொளிர்அனே போற்றி
பாதத்தில் சேர்ந்துய அருளுவை போற்றி
ஆதி யனுதியென் ருனேய் போற்றி
ஜோதி சொரூபம் துலக்குவை போற்றி
ஆந்திர மொழியினில் தேர்ந்தனே போற்றி
சாந்தம் மிகப்புரி சக்தீ போற்றி
ஆரா அமுதென அமைவோய் போற்றி
நீராய் உருகிடச் செய்வோய் போற்றி 170

ஆருயிர் கட்கனே ஆயினே போற்றி
சீருற எம்மைத் தெருட்டுவை போற்றி
ஆர்துணே வேறுளர் அன்னே போற்றி
வேறிட மிலேநீ அருள்வாய் போற்றி
ஆவணி மகத்தவ தரித்தாய் போற்றி
தீவிர மாய்அருள் பெற்ருய் போற்றி
ஆளாக் கொண்டெனே ஆள்வாய் போற்றி
மாளாப் பிறவியை மாய்ப்பாய் போற்றி
ஆரு தாரம் கடந்தனே போற்றி
வேரூேர் பற்றுமில் விமலே போற்றி 180

ஆற்ற லெலாம்அருள் அம்பிகை போற்றி
சாற்றரி தாம்தவத் தணலே போற்றி
ஆன்ம நலம்வளர் அன்னையே போற்றி
மேன்மை மிகப்புரி மேலோய் போற்றி
ஆன்மிக வொளிமிக அருளுவை போற்றி
மேன்மை யெலாம்தர மிளிர்அன்னை போற்றி
இடையற எங்கும் நிறைந்தோய் போற்றி
தடைபல வும்தவிர் தாயே போற்றி
இதமுடன் அருள்நெறிக் கீர்ப்போய் போற்றி
மதசம யங்களின் முடிவே போற்றி

இதுவழி யெனஇனி தோதுவை போற்றி
மதுமலர் மணமென ஒளிருவை போற்றி
இமயநன் மலைநிகர் தவமே போற்றி
சமயம் அறிந்தருள் தாயே போற்றி
இம்மையும் மறுமையும் அருளுவை போற்றி
எம்மையும் நல்வழிக் கீர்த்தனை போற்றி
இரங்கி யருள்புரி இறைவீ போற்றி
குரங்கெனும் மனதை அடக்குவை போற்றி
இருடி நகர்க்குரு இன்னருள் போற்றி
திரிபுர தகனம் உணர்ந்தனை போற்றி

இருளை யகற்றும் எழிற்கதிர் போற்றி
தெருளை விளக்கிடு சின்மயம் போற்றி
இறைநினை வெனும்திரு தரும்அன்னை போற்றி
கறையனைத் தையும் தவிர்த்தருளுவை போற்றி
இறையடி நித்யமென் றருள்வோய் போற்றி
குறைபல நீக்கிடு குணமணி போற்றி
இனமத பேதமற் றிலகனை போற்றி
அனமுறக் கம்கடந் தொளிரனை போற்றி
இன்சொல் இயம்பும் இயல்பினை போற்றி
விஞ்சை யெலாமுணர் வித்தகி போற்றி

இன்சொல் நுவன்யருட் கீர்ப்போய் போற்றி
மின்செய் ஒளித்தவ விளைவே போற்றி

ஈசனின் திருவரு ளாமனை போற்றி
கோசமொ ரைந்தும் கடந்தனை போற்றி
ஈடிணை யற்றெளிர் இறைவீ போற்றி
பாடம் புகட்டிடு பரையே போற்றி
உடுநடு மதியென ஒளிர்வோய் போற்றி
நடுநிவந் தருள்புரி கண்மணி போற்றி
உட்பகை யோட்டிடும் உத்தமி போற்றி
பெட்புடை அடியரைப் பேணுவை போற்றி 220

உணவுடன் அருளையும் ஊட்டுவை போற்றி
குணமிகுந் தொளிர்நெறி கூறுவை போற்றி
உண்டி சுருக்க உணர்த்துவை போற்றி
தொண்டர்கள் குழுவினுள் சேர்ப்போய் போற்றி
உண்ணெகிழ் அடியார்க் குதவுவை போற்றி
தண்ணில வொளிநிகர் தாயே போற்றி
உண்மையின் ஒளியென ஒளிர்வாய் போற்றி
நுண்மை யெலாம்உள் நுழைப்பாய் போற்றி
உண்மை யுணர்த்திடும் உயரனை போற்றி
திண்மைகொள் தவநிலை அருளுவை போற்றி 230

உதவிகள் பலபுரி உத்தமி போற்றி
பதவிகள் பலஅருள் பரையே போற்றி
உயர்தவம் பேணிட ஊக்குவை போற்றி
மயல்தவிர்த் தருள்வளம் கூட்டுவை போற்றி
உயிர்தொறும் இருந்தொளி யூட்டுவை போற்றி
இயலிசை யாகி இலங்குவை போற்றி
உயிர்த்தொகைக் கருள்புரிந் தோம்பனை போற்றி
அயர்வகற் றித்தவம் அருளனை போற்றி
உருகடி யவர்களுக் குதவுவை போற்றி
பெருகுநற் செல்வம் வழங்குவை போற்றி 240

உரைமன மெட்டரும் ஒளியே போற்றி
கரையறி யாஅருட் கடலே போற்றி
உளத்துற வேற்றிலில் வாழனை போற்றி
அளப்பரும் பெருந்தவ மாற்றினை போற்றி

உளமுரு கச்செயும் உயரனே போற்றி
வளமனைத் தையும்இனி தருளுவை போற்றி
உளம்குழை வித்தரு ளூட்டுவை போற்றி
களங்க மிலாதொளிர் கவின்மதி போற்றி
உளம்திருக் கோயிலென் றொளிர்வோய் போற்றி
அளந்தறி தற்கரும் அருள்நிதி போற்றி

உள்ளத் துறவியென் றொளிர்மணி போற்றி
உள்ளூற் றருளொளி உதவுவை போற்றி
உள்ளொளி கூட்டிடும் உயர்மணி போற்றி
விள்ளரு மறையுள் விளக்குவை போற்றி
உறக்கமோர் அணுவுமில் ஒளியே போற்றி
துறக்கமிங் கெய்திடச் செய்வோய் போற்றி
ஊக்கம்மிக் கூட்டியுள் ஒளிர்வாய் போற்றி
சூக்கும காரணச் சுடரே போற்றி
ஊக்கமுண் டாக்கி உயர்த்துவை போற்றி
ஆக்கம் மிகப்புரி அம்பிகை போற்றி

எங்கணும் அருளொளி காணுவை போற்றி
எங்களுக் கருளொளி ஊட்டுவை போற்றி
எங்களை யாண்டருள் ஈஸ்வரி போற்றி
மங்கள வாழ்வருள் மாண்பே போற்றி
எங்கும் இறைவனைக் காண்போய் போற்றி
தங்கம் நிகர்குணத் தாயே போற்றி
எங்கும் நிறைந்தொளிர் எம்மனே போற்றி
சங்கை யனைத்தும் தவிர்ப்போய் போற்றி
எண்ண மெலாம்நிறை வேற்றனே போற்றி
திண்ணிய நிலைபெறச் செய்வோய் போற்றி

எண்ணிய படியெதும் செயும்அனே போற்றி
புண்ணியப் பயனெனப் பொலிதிரு போற்றி
எண்ணென எழுத்தென இலகுவை போற்றி
பண்ணெனப் பாட்டெனப் படர்வோய் போற்றி
எத்திக் கும்தொழும் இறைவீ போற்றி
சத்தி மிகப்புரி தாயே போற்றி

எத்திரு வும்தரும் எம்மனை போற்றி
பத்தி விளைத்தருள் பைங்கிளி போற்றி
எல்லா நலமும் வழங்கனை போற்றி
சொல்லால் அளப்பருஞ் ஜோதீ போற்றி 280

எல்லாம் செய்திட வல்லாய் போற்றி
எல்லோரும் தொழும் இறைவீ போற்றி
எல்லையில் காட்சிநல் கிறைவீ போற்றி
பல்லுயிர் பேணும் பராபரை போற்றி
எல்லையில் பேரரு ளுடையனை போற்றி
மெல்லமெல் லத்திருத் தருளனை போற்றி
எவரிட மும்தயை உடையனை போற்றி
தவறு பொறுத்தருள் சக்தீ போற்றி
எவ்வுயி ரும்பரம் என்போய் போற்றி
செவ்விய நற்பணி வீவாய் போற்றி 290

எவ்வுயிர் பாலும் இரங்குவை போற்றி
செவ்விய பண்பருள் தேவீ போற்றி
என்று மிருந்தருள் இறைவீ போற்றி
நன்றெமைப் பேணருள் நாயகி போற்றி
என்னையு மீர்த்தருள் இறைவீ போற்றி
பன்னரும் பரகதி அருள்வோய் போற்றி
ஏதம் அறுத்தருள் இறைவீ போற்றி
நாதநன் முடிதிகழ் நாயகி போற்றி
ஏழைக ளுக்கிரங் கிடுவோய் போற்றி
ஊழை வெலற்கருள் புரிவோய் போற்றி 300

ஐம்புலச் சேட்டை அடக்குவை போற்றி
செம்பொருள் நல்கித் தெருட்டுவை போற்றி
ஐயம் அகற்றிடும் அருளனை போற்றி
மெய்யறி வாகியுள் மேவுவை போற்றி
ஒடுக்குக என்ன உரைப்போய் போற்றி
நடுக்கம் அகற்றிடு நாயகி போற்றி
ஒப்புயர் வற்றொளிர் ஒண்தவம் போற்றி
செப்பரி தாம்திறன் அருளுவை போற்றி

ஒப்புயர் வேதுமில் ஒளிமணி போற்றி
எப்பொழு தும்புரந் தருளுவை போற்றி

ஒப்புர வினிதுணர்த் தொளியே போற்றி
அப்புமண் அனல்வளி வெளியே போற்றி
ஒருநொடி யினில்நலம் ஊட்டுவை போற்றி
கருவி லுருநெறி காட்டுவை போற்றி
ஒருபெரு நெறியை உணர்த்துவை போற்றி
திருவொடு தெய்விகம் வளரனை போற்றி
ஒருமைகொள் மனமிசை ஒளிர்வோய் போற்றி
இருமை நலங்களு மீவோய் போற்றி
ஒருமை மனம்தரும் ஒருதாய் போற்றி
அருமை யெனும்தவம் அருளுவை போற்றி

ஒலிவகை ஒளிவகை ஆயினை போற்றி
பொலிவுறு ஞானப் பூரணி போற்றி
ஒழுக்க முளோரை உயர்த்துவை போற்றி
உழைப்பினுக்(கு) ஊதிய மீவோய் போற்றி
ஒளிமிகு மாறருள் உத்தமி போற்றி
தெளிவு பெறப்புரி தேசே போற்றி
ஒன்றினுள் பலவுணர் உயரொளி போற்றி
நன்றடி யாருளம் நண்ணுவை போற்றி
ஒன்றெனப் பலவென ஆனாய் போற்றி
மன்றுள் நடம்புரி மாதா போற்றி

ஒன்றே பொருளென ஓதுவை போற்றி
நன்றே செய்கெனும் நாயகி போற்றி
ஓதரி தாம்புகழ் உடையோய் போற்றி
மாதன மாகி வயங்குவை போற்றி
ஓமை உளத்தினில் ஊன்றுவை போற்றி
தீமை தவிர்த்தருள் செய்சிவை போற்றி
ஓம்பொரு ளாயொளிர் ஒண்மணி போற்றி
சாம்ப சிவத்தினுக் கருள்வோய் போற்றி
ஔவையை நிகர்அருள் மணியே போற்றி
திவ்விய போதனை செய்வோய் போற்றி

கசடறுத் தருளொளி காட்டுவை போற்றி
திசைதொறும் அருளைப் பெருக்குவை போற்றி
கடமைகள் உணர்த்திடும் கண்மணி போற்றி
உடைமையென் றருள்நிதி நல்குவை போற்றி
கடினமில் நன்னெறி கழறுவை போற்றி
அடிமுடி அறிதற் கரியாய் போற்றி
கடைக்கண் அருள்புரி காரிகை போற்றி
படைக்கல மாய்மறை யருளுவை போற்றி
கட்டறுத் தருளொளி காட்டுவை போற்றி
சிட்டர்கள் போற்று சிரோமணி போற்றி 350

கணபதி குருவெனக் கண்டனை போற்றி
எணமுறை செயல்அவர்க் கீந்தனை போற்றி
கண்ணென வொளியென இலகுவை போற்றி
தண்ணருள் செய்யும் தயாபரி போற்றி
கதிபெற உயர்நெறி காட்டுவை போற்றி
மதிதொறும் அருளை வளர்ப்போய் போற்றி
கரம்சிர மீதுவைத் தருளனை போற்றி
வரம்பல அடியவர்க் கருள்சிவை போற்றி
கருணை ததும்புரை கழறுவை போற்றி
தருணம் அறிந்தருள் தற்பரை போற்றி 360

கருணை யெனும்பாற் கடலே போற்றி
அரணென மேவி அமைந்தனை போற்றி
கருதுவ யாவும் வழங்குவை போற்றி
சுருதியின் முடிதிகழ் தோகாய் போற்றி
கலங்கரை விளக்கமென் றமைந்தோய் போற்றி
இலங்கரு ளறிவொளி யீவோய் போற்றி
கலங்கிடு வோர்துயர் களைவோய் போற்றி
துலங்கிடு மாறருள் தூயோய் போற்றி
கல்லினை யும்கனி யாக்குவை போற்றி
எல்லையில் பரகதி யீவோய் போற்றி 370

கல்வியின் பயனுணர் கண்மணி போற்றி
பல்வள மும்தரு பரையே போற்றி

கள்ளக் கருத்தினைக் களைவாய் போற்றி
உள்ளம் புகுந்துணர் வூட்டுவை போற்றி
கள்ளமொர் அணுவுமில் கண்மணி போற்றி
உள்ளொளி கூட்டியுள் ஒளிருவை போற்றி
கற்பகம் போலெமைக் காப்பாய் போற்றி
சிற்பர தத்துவச் செல்வீ போற்றி
கற்றவர் கல்லார்க் கருளனை போற்றி
சிற்றம் பலத்தொளிர் தேசே போற்றி

கனிவுறு நன்னெறி கழறுவை போற்றி
புனித மிகப்புரி பூரணி போற்றி
கன்மங் களையெரித் தருளுவை போற்றி
ஜென்மக் கடலைக் கடத்துவை போற்றி
கன்மம் அனைத்தும் கரைப்போய் போற்றி
சின்மய மாகியுள் திகழ்வோய் போற்றி
காட்சிகள் பற்பல காட்டுவை போற்றி
ஆட்சியை அருள்மய மாக்குவை போற்றி
காணற் கரியன காட்டுவை போற்றி
பேணிப் போற்று பிராட்டீ போற்றி

காப்பதற் கேஅமை காரிகை போற்றி
நோற்பவர் கருள்புரி நோன்மை போற்றி
காயினைக் கனியவைத் தருள்வோய் போற்றி
சேயெனை யாண்டருள் செய்வோய் போற்றி
காரண காரிய மானோய் போற்றி
நாரணி யெனவொளிர் நாயகி போற்றி
காரண குருவருள் பெற்றோய் போற்றி
பூரண ஞானப் பொற்பே போற்றி
காரணம் யாவும் அறிந்தனை போற்றி
பூரணம் பெறுநெறி புகல்வோய் போற்றி

காலம் கடந்தொளிர் கதிர்மணி போற்றி
சீலம் மிகுந்திடச் செய்சிவை போற்றி
காலனை வென்றொளிர் கண்மணி போற்றி
ஞாலத்தை நன்று திருத்துவை போற்றி

காற்றென வெப்பம் அகற்றுவை போற்றி
மாற்றுயர் பொன்னென மன்னுவை போற்றி
கிரியைகள் யாவும் கடந்தோய் போற்றி
துரியநல் வெளியில் துலங்குவை போற்றி
குகையென இல்லினைக் கொண்டனை போற்றி
பகைகளை யோட்டு பரஞ்சுடர் போற்றி 410

குண்டலி யினைவச மாக்குவை போற்றி
தொண்டர்கள் துயர்தவிர்த் தாளுவை போற்றி
குயிலனை யின்றருள் கோமளை போற்றி
மயில்நிகர் சாயல்கொள் மாதவம் போற்றி
குயில்நிகர் குரலினில் பாடுவை போற்றி
மயலை வெலச்செயும் மாணருள் போற்றி
குருகாட் டும்நெறி பற்றினை போற்றி
அருள் ஞானத்தொளி ஆயினை போற்றி
குருவடி வினில்வரு கோதாய் போற்றி
பருவரல் நீக்கருட் பண்பே போற்றி 420

குருவருட் கோலங்கள் கண்டனை போற்றி
திருவிளை யாடல்கள் செய்திரு போற்றி
குருவரு ளெனவொளிர் குணமணி போற்றி
திருவருள் நல்கு சிரோமணி போற்றி
குலவிளக் காயொளிர் கோதாய் போற்றி
நலம்எமக் கீந்தருள் நல்லோய் போற்றி
குழுவென அடியவரைக் கூட்டுவை போற்றி
வழுவறச் சட்டம் வழங்குவை போற்றி
குறிகுணம் கடந்தொளிர் கோமளம்போற்றி
அறிவொளி அருளொளி யாமனை போற்றி 430

குறைக ளெலாம் தவிர் கோதாய் போற்றி
மறைமூ லம்தரு மாதா போற்றி
குற்றமில் நல்லறி வருளுவை போற்றி
சற்றும் விடாதெமைத் தாங்குவை போற்றி
குற்ற மெலாம்பொறுத் தருளுவை போற்றி
நற்றவ வாழ்வருள் நாயகி போற்றி

குற்றா லத்தவம் ஆற்றினை போற்றி
மற்றோர் பற்றுமில் மாதா போற்றி
குன்று நிகர்தவக் கோமளை போற்றி
என்றும் அருள்புரி இறைவீ போற்றி

கைப்பொரு ளினும்மிகு மெய்ப்பொருள் போற்றி
அற்புதம் பற்பல ஆற்றுவை போற்றி
கொடுமை தவிர்த்தருள் கொற்றவை போற்றி
அடிமையை ஆட்கொண் டருளுவை போற்றி
கொடைவடி வாயொளிர் கோதாய் போற்றி
நடையை அருள்மய மாக்குவை போற்றி
சச்சித் தெனவொளிர் தாயே போற்றி
அச்ச மெலாம்தவிர் அன்னையே போற்றி
சஞ்சிதம் நீறுசெய் தாயே போற்றி
விஞ்சொளி நல்கிடு வித்தகி போற்றி

சட்டச் சட்டாம் பிள்ளை போற்றி
கட்டனைத் தும்தவிர் காரிகை போற்றி
சட்டத் திருநெறி தரும்அன்னை போற்றி
சிட்டர்க ளுக்கருள் செய்சிவை போற்றி
சட்ட நெறிக்கொரு தலைவீ போற்றி
கட்ட முறுவகை காப்போய் போற்றி
சத்தி பலப்பல தருவோய் போற்றி
சித்தி நிலைபெறச் செய்வோய் போற்றி
சத்தி மிகப்புரி தற்பரை போற்றி
முத்தி பெறும்வழி மொழியன்னை போற்றி

சத்திய நெறிதரு தாயே போற்றி
பத்தியம் கூறு பராபரை போற்றி
சத்தி யருள்பெறு தாயே போற்றி
பத்தி விளைத்தருள் பரையே போற்றி
சத்தினுள் சத்தெனத் தழைவோய் போற்றி
அத்துவி தப்பொரு ளானோய் போற்றி
சத்துவ விளைவருள் தாயே போற்றி
மெய்த்தவம் பேணிட உய்ப்போய் போற்றி

சந்திர மண்டலத் தண்ணொளி போற்றி
மந்திர மூலம் வழங்கனை போற்றி 470

சந்த்ரமண் டலத்தமு துண்போய் போற்றி
அந்தமில் பரசுகம் துய்ப்போய் போற்றி
சந்நிதித் தொண்டருள் தாயே போற்றி
செந்நெறிப் பயனருள் சிற்பரை போற்றி
சமய சமரசத் தலைவீ போற்றி
அமரர்கள் போற்றரு ளரசீ போற்றி
சமயா தீதப் பொருளே போற்றி
எமையாட் கொண்டருள் இறைவீ போற்றி
சராசரம் அனைத்திலும் சார்ந்தனை போற்றி
பராபர நிலையருள் பார்வதி போற்றி 480

சரியைநற் கிரியைகள் தருவோய் போற்றி
பெரியநற் பேறருள் பெரியோய் போற்றி
சற்சங் கம்வளர்த் தருளுவை போற்றி
சிற்சபை நடனம் விளக்குவை போற்றி
சாதனம் பேணிடச் சாற்றுவை போற்றி
போதனை யாவும் புகட்டுவை போற்றி
சாதனை செய்தொளி கண்டனை போற்றி
வேதனை தீர்த்துள் விளங்குவை போற்றி
சாத்தனூர் சாமிக் கருளினை போற்றி
நேத்திர தீட்சைசெய் நித்தியை போற்றி 490

சாத்திரத் தின்பய னுவாய் போற்றி
சூத்திரம் காட்டருள் சூக்குமம் போற்றி
சாத்திரத் தின்வழி செலும்அனை போற்றி
பாத்திரம் அறிந்தருள் நல்குவை போற்றி
சாத்திரப் பொருள் பலசாற்றுவை போற்றி
சூத்திரம் உணர்த்திடு சூக்குமம் போற்றி
காந்தி நிழல்தரு தருவே போற்றி
சாந்தி மிகுந்தொளிர் கதிரே போற்றி
சிக்கல் அனைத்தையும் தீர்ப்போய் போற்றி
தக்கவர்க் கருள்வழி சாற்றுவை போற்றி 500

சிக்கென இறைபதம் பற்றினை போற்றி
முக்க ணுடன்திகழ் முதல்வீ போற்றி
சித்தம் தெளிந்திடச் செய்வோய் போற்றி
முத்தி நலம்தரு முதல்வீ போற்றி
சித்தர் குழாம்புகழ் செல்வீ போற்றி
பத்தர்கள் பரவு பராபரி போற்றி
சித்தி நகர்த்தலம் திகழ்வோய் போற்றி
பத்திமெய்ஞ் ஞானம் பரப்புவை போற்றி
சித்தி யெலாமும் தெரிந்தனை போற்றி
நித்தியநெறி சொலும் நின்மலை போற்றி

சிந்தனை இறைபால் சேர்ப்போய் போற்றி
அந்தமில் பேரருள் அம்பிகை போற்றி
சிந்தையை நன்று திருத்துவை போற்றி
தந்திரம் ஒன்றையுள் சாற்றுவை போற்றி
சிலையென மெய்த்தவம் செய்தனை போற்றி
கலைபல வாயொளிர் கண்மணி போற்றி
சிவச்செயல் யாவுமென் றோர்ந்தனை போற்றி
தவத்தி லுளோர்க்கருள் தாயே போற்றி
சிற்சபை மேவித் திகழுவை போற்றி
பொற்சபை மேவிப் பொலியனை போற்றி

சிற்பர சின்மயச் செல்வீ போற்றி
எப்பொழு தும்புரந் தருள்வோய் போற்றி
சினம்அணு வளவு முறுதாய் போற்றி
மனம்அடங் கப்புரி மாட்சிமை போற்றி
சின்முத் திரையில் திளைத்தாய் போற்றி
பொன்மயில் போலொளிர் புங்கவி போற்றி
சீரில கும்பெருந் திருவே போற்றி
காரிலகும் மழை பொழிவோய் போற்றி
சுடர்மிகு கதிரெனத் தோன்றுவை போற்றி
தொடர்பவப் பிணிதவிர்த் தாளுவை போற்றி

சுத்தி புரிந்தருள் சுடரொளி போற்றி
புத்திநற் றெளிவுற அருளுவை போற்றி

சுமையெனும் வினைதவிர் தூமணி போற்றி
அமைதி அளித்தருள் அகவொளி போற்றி
சுவைசுவை யாய்உண வூட்டுவை போற்றி
நவையற எம்மை நடத்துவை போற்றி
சுழுத்தி கடந்தொளிர் துரியம் போற்றி
விழுத்தவத் துரிய அதீதம் போற்றி
சூக்கும உணர்வருள் தூய்மை போற்றி
வாக்கு மனத்திருள் மாற்றனை போற்றி 540

சூக்குமம் விளக்கருட் சொர்ணம் போற்றி
ஆக்க மெலாம்அருள் ஆரணி போற்றி
சூதோ ரணுவு மிலாதாய் போற்றி
ஆதா ரங்கள் கடந்தோய் போற்றி
செஞ்சுட ரெனவொளிர் சித்துரு போற்றி
பஞ்சென வினையை யெரிப்போய் போற்றி
செத்தவர் தமையும் எழுப்புவை போற்றி
இத்தரைக் கருளொளி யீவோய் போற்றி
செப்ப முறப்புரி தேவீ போற்றி
துப்புறழ் மேனிகொள் தூமணி போற்றி 550

செயற்கருஞ் செயல்பல செய்வோய் போற்றி
செயல்நினை வுரைஇறைக் காக்குவை போற்றி
செய்வதற் கருந்தவம் செய்தோய் போற்றி
உய்வழி எளிதில் உணர்த்துவை போற்றி
செய்வன திருந்தச்செய் சீரோய் போற்றி
ஐவகைப் பொறிபுலன் கடந்தோய் போற்றி
செல்வ மெலாம்பெறச் செய்வோய் போற்றி
வல்வினை தீர்க்கும் மனோன்மணி போற்றி
செவ்விய நெறியருள் சிற்பரை போற்றி
எவ்வுயிர்க் கும்துணை யாம்அனை போற்றி 560

செழுந்தவத் திருவருள் தேவீ போற்றி
குழந்தை நிகர்குணக் கோதாய் போற்றி
சேம மெலாம்தரு செல்வீ போற்றி
மாமயல் தீர்த்தருள் மகிமை போற்றி

சைவநல் உணவுணச் செய்வோய் போற்றி
செய்கை யெலாம்இறைக் காக்குவை போற்றி
சொல்செயல் நினைவைத் திருத்துவை போற்றி
கல்மனம் கனிவுறச் செயும்அனை போற்றி
சொல்லரி தாம்நிலை அருள்வோய் போற்றி
எல்லையில் பேரொளி யானோய் போற்றி 570

சொல்லினுள் சூக்குமம் காணுவை போற்றி
நல்லவர் குழுவினைப் பேணுவை போற்றி
சொன்ன மெனத்திகழ் ஜோதீ போற்றி
பன்னரி தாம்தவப் பண்பே போற்றி
ஜோதிநன் னாட்டம்எற் கருளுவை போற்றி
ஓதரும் உண்மை உணர்த்துவை போற்றி
ஞானக் கண்ணொளி நல்குவை போற்றி
மோனக் கனியருள் மோனம் போற்றி
ஞானக் கனல்வடி வாம்அனை போற்றி
ஞான நிலைகளை நல்குவை போற்றி 580

ஞானச் செங்கோல் கொண்டனை போற்றி
வானர சாளும் மகேஸ்வரி போற்றி
ஞானநற் றேசருள் நாயகி போற்றி
ஊன மொழித்தருள் உத்தமி போற்றி
ஞானோ தயம்அருள் நன்மணி போற்றி
மோனா முதம்இனி தூட்டுவை போற்றி
தகவனைத் தும்தரும் தாயே போற்றி
இகபர நலம்அருள் எம்மனை போற்றி
தக்க தெலாம்தரும் தாயே போற்றி
எக்கண மும்புரந் தருளுவை போற்றி 590

தண்ணளி மிக்குடை தாயே போற்றி
கண்ணருள் செய்தெமைக் காப்பாய் போற்றி
தத்துவம் பற்பல ஆனோய் போற்றி
தத்துவம் கடந்தொளிர் சக்தீ போற்றி
தருணம் அறிந்தருள் தாயே போற்றி
அருள்நலம் அடியார்க் கருளுவை போற்றி

தர்க்க மெலாம்தவிர் தாயே போற்றி
  எற்கும் நலப்புரி இறைவீ போற்றி
தவக்கன லெனத்திகழ் சக்தீ போற்றி
  பவக்கடல் கடத்திடு பரையே போற்றி 600

தவநிறை வாயொளிர் தாயே போற்றி
  அவமறுத் தாண்டருள் அம்பிகை போற்றி
தவவழி யினை நனி சாற்றுவை போற்றி
  அவைபல போற்றும் அணங்கே போற்றி
தவவொளி யெங்கும் பரப்புவை போற்றி
  பவமெனும் பிணியறப் பண்ணுவை போற்றி
தற்பெருமை தவிர் தாயே போற்றி
  பொற்பு மிகுந்தொளிர் புண்ணியம் போற்றி
தனிப்பெருங் கருணையின் வடிவே போற்றி
  வினைப்பயன் தவிர்த்தருள் மேலோய் போற்றி 610

தன்னலம் நாடாத் தாயே போற்றி
  பன்னரும் பண்புடைப் பரையே போற்றி
தாயினும் மிக்க தயாபரி போற்றி
  மாயையை வென்ற மகேஸ்வரி போற்றி
தாய்மை மிகுந்தொளிர் தற்பரை போற்றி
  தூய்மை மிகப்புரி ஜோதீ போற்றி
தாழ்வனைத் தும்தவிர் தக்கோய் போற்றி
  வாழ்விற் கொளியருள் மாண்பே போற்றி
தானதர் மம்வளர் தாயே போற்றி
  மோனநன் னிலையருள் முதல்வீ போற்றி 620

திருந்திட இவண்வரு கென்போய் போற்றி
  மருந்தருந் தாநெறி நல்குவை போற்றி
திருமக ளெனத்திரு அருளுவை போற்றி
  அருவினில் உருவினில் அமையனை போற்றி
திருவடி தரிசனம் தருவோய் போற்றி
  அரியநற் சாதனம் அருள்வோய் போற்றி
திருவடி பெறஅருள் செய்வோய் போற்றி
  பருவபக் குவம்மிகத் தருவோய் போற்றி

திருவருட் பள்ளி நடத்துவை போற்றி
குருவருள் திருமிகக் கூட்டுவை போற்றி

திருவிரு டிப்பதிச் சிவையே போற்றி
திருவருள் வாழ்வருள் தேவீ போற்றி
திரைகள் தவிர்த்தொளி காட்டுவை போற்றி
புரையற எங்கணும் பொலிவோய் போற்றி
திலக மெனத்திகழ் தேவீ போற்றி
உலகினுக் கருளொளி யூட்டுவை போற்றி
தீமை தவிர்த்தருள் தேன்மொழி போற்றி
ஓமை உளத்தில்நன்(று) ஊன்றுவை போற்றி
தீயென மாயை சிதைப்போய் போற்றி
தாயென எமையிவண் பேணுவை போற்றி

தீர்த்தம் திருநீ றருள்வோய் போற்றி
சூத்திரம் நன்றுணர்த் திடுவோய் போற்றி
தீவிர தரனென ஆக்குவை போற்றி
மாவிர தத்தினுக்(கு) ஊக்குவை போற்றி
துட்டர்கள் நேயம் விலக்குவை போற்றி
சிட்டர்கள் நல்லுற வருளுவை போற்றி
துட்டரை நல்லவ ராக்குவை போற்றி
திட்டம் உணர்த்தித் திருத்துவை போற்றி
துதிபுரி முறையினைச் சொல்வோய் போற்றி
நிதியென அடியருள் நிலவுவை போற்றி

துதிபுரி யச்செயும் தூய்மை போற்றி
கதிபெற உய்த்தருள் கருணை போற்றி
துளசியின் மகிமையைச் சொல்வோய் போற்றி
அளவில் அருள்செய் அணங்கே போற்றி
துன்பம் அகற்றுநற் றுணையே போற்றி
பொன்புரை ஞானப் பூரணி போற்றி
தூய்மை மிகும்பர துரியம் போற்றி
வாய்மை வளத்தை வளர்ப்போய் போற்றி
தெய்வ நலம்மிகச் செய்வாய் போற்றி
உய்வழி யிற்செல ஊக்குவை போற்றி

தெய்வமொன் றெனஅருள் செயும்அனே போற்றி
 மெய்வழி யார்க்கும் விளக்கினே போற்றி
தெய்விக நூல்திறம் செப்புவை போற்றி
 உய்வழி இதுவென ஓதுவை போற்றி
தெய்விகம் பெருகிடச் செய்சிவை போற்றி
 மெய்வழி காட்டியுள் மேவுவை போற்றி
தெய்விக விளையாட் டாற்றினே போற்றி
 வையகத் தருளை வழங்குவை போற்றி
தெளிவு மிகப்புரி செந்தழல் போற்றி
 ஒளிமய மாக்கியுள் ஒளிர்மணி போற்றி 670

தேகம் த்ரணமென எண்ணினே போற்றி
 யோகமெய் ஞானநல் ஒளியே போற்றி
தேடரி தாம்பெருந் திருவே போற்றி
 நாடறி தாம்பர ஞானம் போற்றி
தேட்ட மெலாம்தரு திருவே போற்றி
 நாட்ட மெலாம்தரு நலமே போற்றி
தேனே எனத்திகழ் மொழியோய் போற்றி
 ஞானே தயம்அருள் நாயகி போற்றி
தொண்டரை ஆண்டருள் தூயோய் போற்றி
 பண்டுசொல் சுருதிப் பயனே போற்றி 680

தொந்தம் அகற்றிடு தோகாய் போற்றி
 நந்தன வனம்நிகர் நாயகி போற்றி
தொழுபவர்க் கினிதருள் செய்வோய் போற்றி
 இழுதென இளகுநர்க் கிறைவீ போற்றி
தோன்றுத் துணையாய்ச் சூழ்வோய் போற்றி
 ஈன்றா ரினும்மிக இனியோய் போற்றி
நஞ்சையும் அமுதென மாற்றுவை போற்றி
 தஞ்சம்என் போர்க்கருள் தாயே போற்றி
நடுகவுள் பக்தியை என்போய் போற்றி
 இடுக அருட்பயிர் என்போய் போற்றி. 690

நம்பின வர்க்கருள் நல்லனே போற்றி
 செம்பொருள் தந்தருள் திருவே போற்றி

நயம்பட நல்லுரை நவில்வோய் போற்றி
வயங்குமெய்ஞ் ஞானம் வழங்குவை போற்றி
நலம்அனைத் தும்தரு நாயகி போற்றி
நிலமிசை அருளை நிறைப்போய் போற்றி
நலிவு தவிர்த்தருள் நல்லோய் போற்றி
பொலிவு மிகப்புரி புண்ணியை போற்றி
நல்ல தெலாம்அருள் நாயகி போற்றி
ஒல்லையில் அருள்புரி ஒண்மணி போற்றி

நல்லன நல்லவர்க் கருளுவை போற்றி
அல்லன யாவும் அகற்றுவை போற்றி
நல்வழிக் கெமையழைத் தாளுவை போற்றி
பல்வளம் பெருகிட அருள்வாய் போற்றி
நவ்வென வந்தருள் நாயகி போற்றி
எவ்வம் அகற்றிடும் இறைவீ போற்றி
நன்மை யனைத்தையும் நல்குவை போற்றி
சின்மய மாய்ச்செழிப் பருளுவை போற்றி
நன்னிலை யாவும்நல் கருளனை போற்றி
கன்னல்செங் கனியமு தாயினை போற்றி

நாசி நடுத்திகழ் நாட்டம் போற்றி
தேசருள் ஞான சிகாமணி போற்றி
நாதமும் விந்துவு மாயினை போற்றி
நாதாந் தத்தொளிர் நாயகி போற்றி
நாடிடு நல்வழி நவில்வோய் போற்றி
பாடுமெய்ப் பக்தருக் கருள்வோய் போற்றி
நிகழ்ச்சியி னுண்மை விளக்குவை போற்றி
இகழ்ச்சி பொறுத்திடு கென்போய் போற்றி
நிட்களத் தொன்றிடு நின்மலை போற்றி
உட்கொள உயரரு ளூட்டுவை போற்றி

நிட்டை செயப்புரிந் தருளுவை போற்றி
மட்டி லருள்புரி மகிமை போற்றி
நிட்டைமுப் போதும் இருந்தோய் போற்றி
சட்டத்தில் அன்பரைச் சேர்ப்போய் போற்றி

நிட்டையில் உயர்நிலே யருள்வாய் போற்றி
கட்டறுத் தெங்களேக் காப்பாய் போற்றி
நித்தமும் நிட்டையி லாழ்வோய் போற்றி
சித்தம் சிதம்பர மாக்கினே போற்றி
நித்திய நிலேயை உணர்த்துவை போற்றி
சத்திய நன்னெறி சாற்றுவை போற்றி 730

நிராசை யுடன்திகழ் நித்தியை போற்றி
சராசரம் வாழ்ந்திட வாழ்த்துவை போற்றி
நிர்விகற் பத்தில் நிலேத்தோய் போற்றி
கர்வ மகற்றுசிற் கனலே போற்றி
நிலேமை உயர்ந்திடப் புரிவோய் போற்றி
தலேமை அமர்ந்தொளிர் தாயே போற்றி
நிலேயிலே வாழ்வென் றுணர்த்துவை போற்றி
அலேவுறு மனதை அடக்குவை போற்றி
நீங்கா தென்னுள் நிறைந்தனே போற்றி
பாங்கார் பரவொளி அருளுவை போற்றி 740

நீதி நெறிப்படி யாளனே போற்றி
ஆதி பராபரை யாமனே போற்றி
நீரென எங்கும் நிறைந்தோய் போற்றி
பாரெனப் பண்டம் விளேப்போய் போற்றி
நுகர்வன நுகரப் புரிவோய் போற்றி
பகரரும் உயர்நிலே அருள்வோய் போற்றி
நுட்பம் அனேத்தையும் நுவல்வோய் போற்றி
திட்ப மிகும்தவத் திருவே போற்றி
நுணுக்கம் உணர்த்தி யருளுவை போற்றி
கணக்கறிந் தெம்மை நடத்துவை போற்றி 750

நுதல்நடு விழியருள் நோன்மை போற்றி
பதியரு ளியல்பைப் பகருவை போற்றி
நூலனேத் தின்முடி வுணரனே போற்றி
வாலறி வன்பதம் பற்றனே போற்றி
நெகிழ்ந்துள முருகிட அருளுவை போற்றி
உகந்தடி யவர்களே ஆளுவை போற்றி

நெற்றி நடுத்திகழ் நிதியே போற்றி
பெற்றி மிகச்செய் பிராட்டீ போற்றி
நோக்கம் உயர்வுற நோக்குவை போற்றி
மோக்கம் பெறப்புரி முத்தே போற்றி

நோன்புயர் தவமென நுவல்வோய் போற்றி
சாம்ப சிவம்மர போம்பனே போற்றி
நோன்பை உணர்த்தருள் நோன்மை போற்றி
வான்பயில் அமுதை வழங்குவை போற்றி
நோய்பல தீர்த்தருள் நோன்மை போற்றி
சேயெனக் காத்தருள் சீர்மை போற்றி
பக்குவ மிக்கருள் பார்வதி போற்றி
திக்கனைத் திலும்ஒளி சேர்ப்போய் போற்றி
பட்ட வருத்தம் அகற்றுவை போற்றி
கெட்ட தெலாம்தவிர்த் தாளுவை போற்றி

பணிவது நன்றெனப் பகர்வோய் போற்றி
துணிவொடு மாதவம் செய்தோய் போற்றி
பண்பயில் பாடல்கள் பாடுவை போற்றி
பண்பொடு வாழ்ந்திட வாழ்த்துவை போற்றி
பத்தர் குழாத்தைப் பெருக்குவை போற்றி
முத்தர்கள் நடுவொளிர் முத்தே போற்றி
பத்தியை எங்கும் பரப்புவை போற்றி
புத்தி புகட்டிடு புங்கவி போற்றி
பந்தம் அறுத்தருள் பரையே போற்றி
சிந்தையில் தெளிவருள் தேசே போற்றி

பயனருள் தருநிகர் பரையே போற்றி
தயவெனும் சாகர மாயினை போற்றி
பரநா தத்துடன் ஒன்றினை போற்றி
பரஞா னப்பொலி வாயினை போற்றி
பரவசத் தாழ்த்திடு பரையே போற்றி
கரவறி யாருளக் கனியே போற்றி
பலபிணி யும்தவிர் பான்மை போற்றி
துலையென நின்றொளிர் தூய்மை போற்றி

பலவுளும் ஒன்றுணர் பார்வதி போற்றி
நலமெவர்க் கும்செயும் நல்லனே போற்றி 790

பல்லுல கும்தொழும் பரையே போற்றி
நல்லவர் போற்றருள் நாயகி போற்றி
பழியுறு பிறவிகள் தவிர்பரை போற்றி
வழியினைத் திறந்தருள் மாமணி போற்றி
பளிங்கென வேயொளிர் பாங்கே போற்றி
களங்கம் அறுத்தருள் காரிகை போற்றி
பற்றணு வணுவாய் நீக்குவை போற்றி
உற்றரு ளமுதருத் தொருதாய் போற்றி
பற்றுகள் யாவும் அறுப்பாய் போற்றி
பற்றநின் பதப்பற் றருள்வாய் போற்றி 800

பாகென உருகிடப் பண்ணுவை போற்றி
தேகம் தளியெனச் செய்பரை போற்றி
பாசம் அறுத்தருள் பண்பே போற்றி
நேசமொ டாண்டருள் நிமலே போற்றி
பாரினில் வந்தருள் பரமே போற்றி
கோரிய காரியம் முடிப்போய் போற்றி
பிணிகள் அனைத்தும் அகற்றுவை போற்றி
பணிபுரிந் துய்கெனப் பகர்வோய் போற்றி
பிரமவித் தையிலுயர்ந் தொளிர்வாய் போற்றி
குருமணி யெனத்திகழ் கோமளே போற்றி 810

பிரமவித் தையினை விளக்குவை போற்றி
பரம பவித்திர மாக்குவை போற்றி
பிள்ளையார் குப்பம் பிறங்கனே போற்றி
உள்ளம் திருத்தியுள் உறைவோய் போற்றி
பிறப்புள் உறுநிலை பெற்றேய் போற்றி
சிறப்படி யவர்பெறச் செய்வோய் போற்றி
பிறர்க்குத விடும்இயல் புடையாய் போற்றி
மறைப்பை விலக்கிடு மாட்சிமை போற்றி
பிறவியின் பயனருள் பெட்பே போற்றி
துறவுளம் தருமுயர் பொற்பே போற்றி 820

புகலளித் தாண்டருள் பூரணி போற்றி
தகுதி யெலாம்தரு தவவொளி போற்றி
புகழ்விளங் கப்புரி புனிதம் போற்றி
அகமிசை ஓங்கரு ளறிவே போற்றி
புடமிடு பொன்னெனப் பொலிவாய் போற்றி
சுடர்விடு ஞானக் கதிரே போற்றி
புணையெனப் போந்து புரப்போய் போற்றி
இணையில் அருள்புரி இறைவீ போற்றி
புண்ணியத் துள்ளொளிர் புண்ணியம் போற்றி
தண்ணரு ளியல்பைத் தரும்பரை போற்றி 830

புண்ணியர் போற்றருட் பொலிவே போற்றி
எண்ணில் உயிர்க்கரு ளீவோய் போற்றி
புதைய லெனப்பொலி பொன்னே போற்றி
சிதைவறி யாத்திரு சேர்ப்போய் போற்றி
புத்தகப் பொருளெனப் பொலிவோய் போற்றி
வித்தக வாழ்வருள் மேலோய் போற்றி
புந்தி திருந்திடப் புரிவோய் போற்றி
நந்தலில் ஞான விளக்கே போற்றி
புலருமுன் தண்ணீர் ஆட்டுவை போற்றி
புலவர்கள் நாளும் போற்றனை போற்றி 840

புல்லரை நல்லவ ராக்குவை போற்றி
சொல்லுதற் கரியன சொல்லுவை போற்றி
புவனியில் தவநெறி பேணினை போற்றி
உவமை சொலற்கரும் ஒண்மணி போற்றி
புவனி யெலாம்புரந் தருளுவை போற்றி
நவைதவிர்த் தருளர சாளுவை போற்றி
பூங்கொடி போற்பொலி பொற்பே போற்றி
ஓங்குபொன் மலைநிகர் ஒண்தவம் போற்றி
பூமியிற் போந்தருள் பொற்பே போற்றி
காமியம் நீக்குயர் கற்பே போற்றி 850

பூரணப் பேரொளி வடிவே போற்றி
ஆரண முடிவில் அமர்ந்தோய் போற்றி

பெட்டகப் பொருள்பெறு கென்போய் போற்றி
எட்டொ டிரண்டென இலகுவை போற்றி
பெரியதிற் பெரியநற் பொருளே போற்றி
உரிய வெலாம்அருள் உறவே போற்றி
பெரியோர் சேவை புரிந்தனை போற்றி
அரியா சனத்தமர் அன்னையே போற்றி
பேதமை நீக்கு பிராட்டீ போற்றி
மாதவச் செல்வம் வழங்குவை போற்றி 860

பொய்யை விலக்கிடு பூரணி போற்றி
மெய்யறி வீந்தருள் வித்தகி போற்றி
பொறிபுலன் அறிவரு பூரணம் போற்றி
நெறியில் நிலைத்திட அருளுவை போற்றி
பொறிபுலன் யாவும் அடக்குவை போற்றி
அறிவரு மெய்யறி வருளுவை போற்றி
பொறுமை மிகுந்திடப் புரிவோய் போற்றி
சிறுமை தவிர்ந்திடச் செய்வோய் போற்றி
பொற்சபை யெனவொளிர் புங்கவி போற்றி
சற்ஜனர் போற்று தபோதனி போற்றி 870

பொன்னொளி மிக்க புராதனி போற்றி
என்னுளம் கோயில்கொள் ஈஸ்வரி போற்றி
போதாந் தத்தைப் புகட்டனை போற்றி
பாதாம் புயம்அருள் பரையே போற்றி
மஞ்சென அருள்மழை பொழிவோய் போற்றி
செஞ்சரண் சிரமிசை சூட்டுவை போற்றி
மடமை தவிர்த்தருள் மாட்சிமை போற்றி
கடமை உணர்த்திக் காப்போய் போற்றி
மடிதவிர்த் தாண்டருள் மாதா போற்றி
மிடிதவிர்த் தருள்புரி மேலோய் போற்றி 880

மண்ணைவிண் ணுக்கருள் மணியே போற்றி
எண்ணரும் செயல்கள் இயற்றுவை போற்றி
மதியமு தூட்டிடும் மாதா போற்றி
விதியினை மாற்றிட வல்லோய் போற்றி

மந்திரம் ஒன்றினுள் மருவினை போற்றி
யந்திரம் போல்உழைத் திடும்அனை போற்றி
மந்திர வடிவுடை மணியே போற்றி
தந்திரம் யாவும் உணர்த்துவை போற்றி
மயக்கம் தவிர்த்தருள் மாதா போற்றி
இயக்கிடு வோன்இறை என்போய் போற்றி

மயர்வற மதிநலம் அருளுவை போற்றி
உயர்வற உயர்நிலத் தொளிர்வோய் போற்றி
மருந்தருந் தாநெறி நல்குவை போற்றி
திருந்திடச் செய்தருள் சேர்ப்போய் போற்றி
மலைமக ளென்ன வயங்குவை போற்றி
மலைவற ஞானம் வழங்குவை போற்றி
மலைமேல் ஒளிர்விளக் காயினை போற்றி
நிலையா வும்தரு நின்மலை போற்றி
மன்னிய திருவருள் மாண்பே போற்றி
பன்னரும் சாத்திரச் சொற்பொருள் போற்றி

மன்னுயிர் கட்கொரு மாதா போற்றி
என்னுயிர்க் கின்னுயி ராமனை போற்றி
மாசு தவிர்த்தருள் மாமணி போற்றி
வாசி விளைவுற அருளுவை போற்றி
மாதவம் பல்லாண் டாற்றனை போற்றி
போதம் அளித்தருள் புங்கவி போற்றி
மாமறைப் பொருள்உள் வளர்த்தனை போற்றி
சேம மெலாமுறச் செய்தனை போற்றி
மாயா மோகம் அறுப்போய் போற்றி
சேயாம் எனைப்புரந் தருள்வாய் போற்றி

மாறு நல்லுளம் மன்னுவை போற்றி
ஏறு நிலையினில் ஏற்றுவை போற்றி
மெய்யடி யார்பணி நல்குவை போற்றி
உய்வுறு மாறரு ளூட்டுவை போற்றி
மேருவைப் போல விளங்குவை போற்றி
சாரும்நல் வடியவர்க் கருளுவை போற்றி

மையல் அகற்றிடும் மாமணி போற்றி
வையம் விளங்கிட வாழ்த்துவை போற்றி
யமபயம் நீக்கி யருள்வோய் போற்றி
அமரநல் வாழ்வருள் அமுதே போற்றி 920

யாரும்எய் தற்கரும் நிலையினை போற்றி
கோரும் வரம்கொடுத் தருளனை போற்றி
யாவும் இறைமயம் எனும்அனை போற்றி
ஓவரு ஞானநல் லுருவே போற்றி
யானென தென்ப தறுப்போய் போற்றி
ஞானநன் மணியென நண்ணினை போற்றி
யுகமனைத் தும்கடந் தொளிரனை போற்றி
மகிமை மிகும்தவ வாழ்வே போற்றி
யுத்திக் கெட்டரும் ஒளியே போற்றி
கர்த்தனின் அருளை விளக்குவை போற்றி 930

யோகநல் வழிகள் உணர்ந்தனை போற்றி
ஏகநல் வழியெமக் கீவோய் போற்றி
யோக முடிக்கண் ஒளிர்வோய் போற்றி
ஏகநன் னெறிசொலி ஆள்வோய் போற்றி
யோகம் பேணி உயர்ந்தனை போற்றி
சோகம் தவிர்வழி சொல்லுவை போற்றி
யோகமெய்ஞ் ஞானம் உணர்த்துவை போற்றி
ஏகம்மெய்ப் பொருளெனும் ஈஸ்வரி போற்றி
ரத்தின மணிமுடி புனைவோய் போற்றி
முத்தென மணியென ஒளிருவை போற்றி 940

வகைவகை யாய்ச்சமைத் தூட்டுவை போற்றி
நகைமுகத் தோடருள் நல்குவை போற்றி
வஞ்சகம் மாயை தவிர்ப்பாய் போற்றி
தஞ்சம் அளித்தாள் தயவே போற்றி
வருத்த மெலாம்தவிர் மாதா போற்றி
திருத்தி யருள்புரி தேவீ போற்றி
வல்லப மீந்தருள் மாட்சிமை போற்றி
நல்லவர்க் கினிதருள் நல்குவை போற்றி

வழியினைக் காட்டருள் மாதா போற்றி
அழிவறி யாப்பொருள் அருளுவை போற்றி 950

வள்ளலென் றருளை வழங்குவை போற்றி
எள்ள லிலாஅரு ளியல்பே போற்றி
வற்று அருளமு தூற்றே போற்றி
பொற்றுள் பெறஅருள் புரிவோய் போற்றி
வாணி யெனத்திகழ் மயிலே போற்றி
சேணினை யாளருட் செல்வீ போற்றி
வாராத் திருவரு விப்போய் போற்றி
பேரா யிரம்கொள் பிராட்டீ போற்றி
வாழ்வழி காட்டிடு மாதா போற்றி
ஊழ்வலி மாற்றிடும் உத்தமி போற்றி 960

விஞ்சை யெலாமும் விளக்குவை போற்றி
சஞ்சிதம் நீறுசெய் தணலே போற்றி
விடியலில் மூழ்கவைத் தருள்வோய் போற்றி
அடிமலர்க் காட்சியை அருள்வோய் போற்றி
விண்டுரைத் தற்கரும் சீரோய் போற்றி
கொண்டலை நிகர்அருட் குணத்தாய் போற்றி
விண்ணகத் தார்தொழும் வித்தகி போற்றி
மண்ணகம் வாழ்த்தருள் மாதாபோற்றி
விண்ணென எங்கும் விளங்குவை போற்றி
கண்ணொளி யீந்தருள் கண்மணி போற்றி 970

வித்தென விளைவென வொளிர்வோய் போற்றி
சுத்தசன் மார்க்கச் சுடரே போற்றி
விரதம் பேணவைத் தாள்வாய் போற்றி
சரதம்நல் லருள்பெறல் என்போய் போற்றி
விரியா துளத்தை ஒடுக்குவை போற்றி
துரியா தீதச் சுடரொளி போற்றி
விருப்பு வெறுப்பற் றிலங்குவை போற்றி
பொருப்பு நிகர்தவப் பொலிவே போற்றி
விரைவினில் ஞானம் விளக்குவை போற்றி
வரைவற அருளை வழங்குவை போற்றி 980

விழிப்பினை நல்கு விழுப்பொருள் போற்றி
செழிப்புறு மெய்த்தவத் திருவே போற்றி
விள்ளரும் உண்மை விளம்புவை போற்றி
ஒள்ளிய ராக்கி உயர்த்துவை போற்றி
வினைத்தொகை சுட்டருள் வித்தகி போற்றி
எனைக்கரை சேர்த்திடும் ஈஸ்வரி போற்றி
வீட்டுநன் னெறியினைக் காட்டுவை போற்றி
நாட்டினுக் கருளமு தூட்டுவை போற்றி
வீட்டில் தவம்புரி வித்தகி போற்றி
பாட்டின் பொருளைப் பகருவை போற்றி 990

வெம்மை தவிர்த்தருள் வித்தகி போற்றி
நன்மை பெறப்புரி நாயகி போற்றி
வேகம் தவிர்சொல் விளம்புவை போற்றி
தாகம் தணிவுற அருளுவை போற்றி
வேங்கட பதியை மணந்தனை போற்றி
ஈங்கெமை ஆண்டருள் இறைவீ போற்றி
வேடம் பலகொடு மேவுவை போற்றி
பாடம் பலவும் பயிற்றுவை போற்றி
வேண்டும் வரம்தரும் விமலை போற்றி
யாண்டும் இருந்தருள் எம்மனை போற்றி 1000

வேதங்கள் போற்றும் விசித்திரம் போற்றி
சோதனை யில்வெலும் சூக்குமம் போற்றி
வேதாந் தத்தை விளக்கனை போற்றி
நாதாந் தத்தொளிர் நன்மணி போற்றி
வையப் பித்தை அழிப்போய் போற்றி
தெய்வப் பித்தை வளர்ப்போய் போற்றி
வைதிக ஆத்மிக வளமே போற்றி
உய்தி அளித்தருள் ஒண்மணி போற்றி 1008

நானாவித திவ்ய பரிமள மந்த்ர
புஷ்பாணி சமர்ப்பயாமி

ஓம் ஓம் ஓம்

அருட் கொடிப் பாடல்

[ஆனந்தக் களிப்பு]

அருட் கொடி ஓங்குது பாரீர்—நல்ல
அழகிய பிள்ளையார் குப்பநன் னகரில் (அருட்)

பொருட்குவை நல்குது பாரீர்—ஞான
போதம் வழங்கிப் புரக்குது பாரீர்
தெருட்குணம் ஊட்டுது பாரீர்—ஞான
தேசு வழங்கித் தெருட்டுது பாரீர் (அருட்)

அன்பருள் கூட்டுது பாரீர்—அரு
ளறிவு வழங்கி விளங்குது பாரீர்
இன்பொளி யாக்குது பாரீர்—எங்கும்
ஏகசன் மார்க்கம் விளக்குது பாரீர் (அருட்)

இரெட்டியப் பட்டி சுவாமி—சட்டத்
தின்சிறப் போதி நன் றீர்க்குது பாரீர்
அருட்சக்தி அன்னை புகழைச்—சாற்றி
அன்பர் குழாத்தை அழைக்குது பாரீர் (அருட்)

அடியவர்க் கிம்மை மறுமை—நலன்
அருளி அருள்மய மாக்குது பாரீர்
மடிமிடி நீக்கியெல் லோர்க்கும்—அருள்
மாண்பு வழங்கும் மகிமையைப் பாரீர் (அருட்)

அவரவர் பக்குவம் நோக்கித்—தவம்
அருளி உயர்நிலைக் கூக்குது பாரீர்
பவவழி நீக்குது பாரீர்—அருட்
பண்பு செழிக்கப் பறக்குது பாரீர் (அருட்)

———

வாழ்த்து

அருள்நலம் வழங்கிப் பேணும்
ஆலவாய்ப் பூர்ணர் வாழ்க
மருள்தவிர்த் தருளார் சட்ட
வழியருள் குருதாள் வாழ்க
பொருள்புகழ் புனிதம் நல்கிப்
போற்றருட் சக்தி வாழ்க
தெருளளித் துலகைப் பேணும்
சித்திநன் னகர் சீர் வாழ்க

மங்களம்

மங்களம் மதுரா புரிப்பரி
பூர்ண மூர்த்திக்கு மங்களம்
மங்களம் இருடிப் பதிக்குரு
மாண் கருணைக்கு மங்களம்
மங்களம் பிள்ளையார் குப்பத்தருட்
சக்தி அன்னைக்கு மங்களம்
மங்களம் அருட்சட்ட அடியார்
அன்பர் பலர்க்கும் மங்களம்.

பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தர்க்குப் பத்த ராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்(கு)
ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினல் இடவல் லார்க்குக்
கரும்பினில் கட்டி போல்வர்
கடவூர் வீரட்ட ளுரே

—திருநாவுக்கரசு சுவாமிகள்.

ஓ

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருட் பாடல்கள்

வேத விதிப்படி பூசைகள் செய்யென்றும்
ஆதி பரம்பரை யாகத் தொடர்ந்திறை
ஆதி பராபரமே—அடிமையை—
ஆட் கொண்ட சூட்சமடி

அறுகு பலமலர் களபகுங் குமமொடு
அடியர் தொழுதிட அவனியில் வலம்வரும்
அரிய மகிமையை எளிதினில் உணரவும் வெளியாமோ?

பூசை புரிகின்ற மெய்த்தவத் தோருக்குப்
புகழ் கொடுக்கின்ற திரனடி

ஆசார முள்ளோர் அறிவுநிலை பூத்தமலர்
பூசா விதிகள் புரிந்தார் பராபரமே
சாத்திர வழிநடந்து சத்தியநிலை பூத்தமலர்
ஆத்தி மலர்என்(று) அணிந்தார் பராபரமே
பந்தம் அறுத்தும் பலகாலும் பூத்தமலர்
கொன்றை மலர்என்று குறித்தார் பராபரமே
அன்பைப் பெருக்கி அனுதினமும் பூத்தமலர்
தும்பை மலர்என்று துதித்தார் பராபரமே
செருக்கறுத்துத் தானுகிச் சென்றஇடம் பூத்தமலர்
எருக்க மலர்என்(று) இசைந்தார் பராபரமே
சிந்தை தெளிந்து சிவமாகிப் பூத்தமலர்
நந்தியா வர்த்தமென்று நவின்ருர் பராபரமே
அவ்வும் உவ்வும் ஓமென்ற அட்சரத்தை மூன்றிதழாய்
சிவ்வு-மவ்வும் என்றுகிள்ளிச் செபித்தார் பராபரமே

அருட் சட்ட நெறியின் சிறப்பு இயல்புகள் :

1. விடியல் நான்கு மணிக்கு பச்சைநீரில் முழுகுதல்.
2. வெந்நீரைப் பயன்படுத்தாமை.
3. இறை வழிபாடு ஆற்றுதல்.
4. ஒருவனே தெய்வம் என்று நம்புதல்.
5. பிற மதங்களை நிந்திக்கா திருத்தல்.
6. மரக்கறி உணவையே கொள்ளுதல்.
7. பஞ்சமா பாதகம் தவிர்த்தல்.
8. மருந்து அருந்தாமல் இறையருள் துணை கொண்டே நோய்களை நீக்கிக்கொள்ளுதல்.
9. ஜோதிடம் மாந்த்ரீகம் நாடாமை,
10. பிரார்த்தனை செய்து கொள்ளாமை.
11. அறமன்றம் அணுகாமை.
12. இறந்தவர்க் [illegible] இரங்காமல், தீக்கிறையாக்காமல், மண்காப்பு செய்தல்
13. வெள்ளிக்கிழமை விரதம் பேணல்.
14. தினமும் அரை மணி நேரமாவது அருள் நிட்டை புரிதல்
15. உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்து, அருள் வாழ்வு ஆற்றுதல்.
16. இறைவன் அருளால் எய்தும் நலங்களை ரகசியமாகப் போற்றிக் காத்தல்.

ஓ

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருட் பாடல்கள்

வேத விதிப்படி பூசைகள் செய்யென்றும்
ஆதி பரம்பரை யாகத் தொடர்ந்திறை
ஆதி பராபரமே—அடிமையை—
ஆட் கொண்ட சூட்சமடி

அறுகு பலமலர் களபகுங் குமமொடு
அடியர் தொழுதிட அவனியில் வலம்வரும்
அரிய மகிமையை எளிதினில் உணரவும் வெளியாமோ?

பூசை புரிகின்ற மெய்த்தவத் தோருக்குப்
புகழ் கொடுக்கின்ற தீரனடி

ஆசார முள்ளோர் அறிவுநிலை பூத்தமலர்
பூசா விதிகள் புரிந்தார் பராபரமே
சாத்திர வழிநடந்து சத்தியநிலை பூத்தமலர்
ஆத்தி மலர்என்(று) அணிந்தார் பராபரமே
பந்தம் அறுத்தும் பலகாலும் பூத்தமலர்
கொன்றை மலர்என்று குறித்தார் பராபரமே
அன்பைப் பெருக்கி அனுதினமும் பூத்தமலர்
தும்பை மலர்என்று துதித்தார் பராபரமே
செருக்கறுத்துத் தானகிச் சென்றஇடம் பூத்தமலர்
எருக்க மலர்என்(று) இசைந்தார் பராபரமே
சிந்தை தெளிந்து சிவமாகிப் பூத்தமலர்
நந்தியா வர்த்தமென்று நவின்றார் பராபரமே
அவ்வும் உவ்வும் ஓமென்ற அட்சரத்தை மூன்றிதழாய்
சிவ்வு-மவ்வும் என்றுகிள்ளிச் செபித்தார் பராபரமே

அருட் சட்ட நெறியின் சிறப்பு இயல்புகள் :

1. விடியல் நான்கு மணிக்கு பச்சைநீரில் முழுகுதல்.
2. வெந்நீரைப் பயன்படுத்தாமை.
3. இறை வழிபாடு ஆற்றுதல்.
4 ஒருவனே தெய்வம் என்று நம்புதல்.
5. பிற மதங்களை நிந்திக்கா திருத்தல்.
6. மரக்கறி உணவையே கொள்ளுதல்.
7. பஞ்சமா பாதகம் தவிர்த்தல்.
8. மருந்து அருந்தாமல் இறையருள் துணை கொண்டே நோய்களை நீக்கிக்கொள்ளுதல்.
9. ஜோதிடம் மாந்த்ரீகம் நாடாமை,
10 பிரார்த்தனை செய்து கொள்ளாமை.
11 அறமன்றம் அணுகாமை.
12. இறந்தவர்க்கு இரங்காமல், தீக்கிறை யாக்காமல், மண்காப்பு செய்தல்
13. வெள்ளிக்கிழமை விரதம் பேணல்.
14. தினமும் அரை மணி நேரமாவது அருள் நிட்டை புரிதல்
15. உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்து, அருள் வாழ்வு ஆற்றுதல்.
16. இறைவன் அருளால் எய்தும் நலங்களை ரகசியமாகப் போற்றிக் காத்தல்.

பாலகவி மி. கே. வேங்கடராமன் அவர்கள்
இயற்றிய நூல்கள்

குருபர வணக்கம்

சற்குருநாதர் திருவடிப் புகழ்ச்சி

சற்குரு நாமாவளி

மதுரைப் பரிபூர்ண விநாயகர் திருவெம்பாவை,
திருப்பள்ளியெழுச்சி, திருப்பல்லாண்டு

திருக்கோயில் திருப்பணி முறையீடு

இரெட்டியப்பட்டி குருநாதர் அர்ச்சனை

அருட் ப்ரஸாதம்

குருநாதர் பிள்ளைத் தமிழ்

குரு அருள் திருவுந்தியார்

பேரின்ப வேட்கை

குரு அருள் வேட்டல்

அருள்மணிப் பெட்டகம்

அருள் நெறி மாலை

அன்பின் ஒளி

அருட்சட்ட வழிபாட்டு முறை

அருட் சக்தி அன்னை வரலாறு

கருணைமிகு வள்ளல் அருள்நிறை சரிதம்

சமயப் பொதுநெறி கண்ட சற்குருநாதர்

அன்புவழி காட்டும் அருளுபதேசங்கள்

விவரங்கட்கு:

சற்குருதாசன் டிரஸ்ட்,

11-B, நிமந்தகார ஒற்றைவாடை வீதி, பெரிய காஞ்சிபுரம்-631 502,

(செங்கற்பட்டு மாவட்டம்)